Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | கார்த்திகை 24 | 10 - 12 - 94 | சனிக்கிழமை | ஓசை 295

## க.பொ.த. [உ/த] பரீட்சை முடிவு கொழும்பில் வெளியாகின

கடந்த ஒகஸ்டில் நடந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகள் கொழும்பில் நேற்று வெளியிடப்பட்டுள்ளன. க.பொ.த (சா/தர) பரீட்சைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் அநற்த இடையூறு நேராதவகையில் இன்று மாலை பாடசாலைகளுக்கு பரீட்சை முடிவுகள் அனுப்பி வைக்கப்படுமென பரீட்சை ஆணையாளர் கொழும்பில் தெரிவித்துள்ளார். இம்முறை உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் பரீட்சார்த்திகளில் 56,728பேர் பல்கலைக் கழகங்ளுக்கு புகும் தகுதியை பெற்றுள்ளனர் மருத்துவ உயிரியல் துறைக்கு 10,522 பேரும், பொறியியல்துறைக்கு 3,609 பேரும், வணிகத்துறைக்கு 17,103 பேரும், கலைத் துறைக்கு 25,494 பேரும் தகுதி பெற்றுள்ளனர்.

## பிரதேச செயலகங்களுக்கு முழுதான அதிகாரங்கள்

(யாழ்ப்பாணம்)

முறையான பிரதேச செயலர்கள் நியமிக்கப்பட்டுள்ளதை அடுத்து யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலகங்களுக்கு ஜனவரி மாதத்திலிருந்து முழு அளவிலான அதிகாரங்கள் கையளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகங்களின் கீழும் அரசாங்க அதிபரிடமுள்ள அதிகாரங்கள் வழங்கப்படும். மத்திய - மாகாண அரசாங்கங்களின் நிதி நேரடியாகவே பிரதேச செயலகங்களுக்கே வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் அரச அதிபர் மத்திய அரசின் இணைப்பாளராகவே செயல்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அபிவிருத்தித் திட்டம், உணவு, ஓய்வூதியம், இறப்பு. பிறப்பு பிரிவு, திட்டமிடல், அடையாளஅட்டை, கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கல, சுங்க இலாகா, தேர்தல் கிளை,

[6ஆம் பக்கம் பார்க்க]

## சந்திரிகா அரசிற்கு தலைவர் பிரபா பதில்

சிறிலங்கா பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அநுருத்த ரத்வத்த எழுதியிருந்த கடிதத்துக்கு பதில் கடிதம் ஒன்று தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களால் சிறிலங்கா அரசாங்கத்துக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்துவது, அடுத்த கட்ட சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பது தொடர்பாக அமைச்சர் ரத்வத்த எழுதிய கடிதத்துக்கான பதில்கள் இக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

இப் பதில் கடிதம் நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக சிறிலங்கா அரசாங்கத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக புலிகளின் வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

## கொழும்பில் நேற்று சமாதான பாதயாத்திரை

(கொழும்பு)

யுத்தத்தை நிறுத்தி சமாதானம் ஏற்படுத்துவதை வலியுறுத்தி நேற்று கொழும்பில் மாபெரும் சமாதான பாதயாத்திரையும், கூட்டமும் நடைபெற்றது.

பாதயாத்திரையில் சென்றவர்கள் கொடூர யுத்தம் வேண்டாம் என குரல் எழுப்பியதோடு சுலோக அட்டைகளையும் ஏந்திச்சென்றனர்.

காலிமுகத் திடலிலும், கம்பல் பூங்காவிலிருந்தும் ஆரம்பமான பாதயாத்திரைகள் விகாரமகாதேவி பூங்காவில் முடிவடைந்தன.

மனித உரிமைகள் இயக்கங்களும் இப் பாதயாத்திரையில் கலந்துகொண்டன. இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான வாசுதேவ நாணயக்காரவும் இதில் கலந்துகொண்டார்.

சக்கர நாற்காலிகளில் ஊனமுற்றவர்களும் இப் பாதயாத்திரையில் சமாதான அறிகுறியாக பலூன்களை ஏந்தியவாறு வந்தனர்.

[6ஆம் பக்கம் பார்க்க]

# அம்பாறையில் புலிகள் தாக்கு; 7விசேட அதிரடிப் பொலிசார் பலி!

## அகதிமுகாம் பராமரிப்பு ஜனவரியில் புதிய திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அகதி முகாம்கள் அனைத்தையும் பராமரிப்பதற்கு புதியதொரு திட்டம் ஜனவரி மாதத்திலிருந்து நடைமுறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய பராமரிப்புத் திட்டத்தின்படி அகதி முகாமை கவனிக்கும் பணியிலிருந்து அரச சார்பற்ற நிறுவனங்கா விலகிக் கொள்ளும் எனக் கூறப்பட்டது.

இப்பணி கிராம சேவையாளர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. அகதி மக்களின் அத்தியாவசிய தேவைகள் அனைத்தையும் கிராமசேவையாளர்கள் கவனிப்பார்கள்.

மலசல கூடவசதி, நீர்வசதி, உணவு வசதி என்பவற்றை கிராமசேவையாளர்கள் கவனிப்பார்கள். குறைநிரப்பு பணிகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் கவனிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## பலியானோரில் இருவர் அதிகாரிகள்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் ரோந்து சென்ற விசேட அதிரடி பொலிஸ் படையினர்மீது நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் தாக்குதலில் இரு அதிகாரிகள் உட்பட ஏழுக்கும் மேற்பட்ட விசேட அதிரடிப் படையினர் கொல்லப்பட்டனர். பவள் உட்பட இரண்டு வாகனங்கள் சேதமாககப்பட்டதுடன் பல ஆயுதங்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன. விடுதலைப் புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

## வீரச்சாவு

2ஆம் லெப். புவிவாணன்

அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன் தினம் ரோந்து சென்ற விசேட அதிரடிப் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்தியதாக்குதலில்

## போர்நிறுத்தம் குறித்து சந்திரிகா-ஹமில்டன் பேச்சு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் போர் நிறுத்தம் செய்வது குறித்து ஜனாதிபதி சந்திரிகா பாப்பரசரின் வருகையோடு கொண்டுவர தீர்மானித்துள்ள யுத்த நிறுத்தத்தை பின்னர் மேலும் நீடிப்பது குறித்தும் அரச வட்டாரங்களில் ஆராயப்படுகின்றது.

படையினர்மீது நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் தாக்குதலில் இரு அதிகாரிகள் உட்பட ஏழுக்கும் மேற்பட்ட விசேட அதிரடிப் படையினர் கொல்லப்பட்டனர். பவள் உட்பட இரண்டு வாகனங்கள் சேதமாககப்பட்டதுடன் பல ஆயுதங்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன. விடுதலைப் புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

நேற்று முன்தினம்பி.ப1-23 மணியளவில் ஊரணி விசேட அதிரடிப்படை முகாமிலிருந்து செம்மணிக்குளம் என்னும் இடத்திற்கு ரோந்து வந்த 20ற்கும் மேற்பட்ட விசேட அதிரடிப்படையினர் மீதே விடுதலைப்புலிகள் இத் திடீர்த்தாக்குதலை நடத்தினர்.

தாக்குதல் ஆரம்பித்த ஏழு நிமிட நேரத்தில் ஏழுக்கும் மேற்பட்ட விசேட அதிரடிப் படையினர் கொல்லப்பட்டனர்.

இதேவேளை தாக்குதலுக்குள்ளான விசேட அதிரடிப் படையினருக்கு உதவவென பவள் கவச வாகனம் மற்றும் இன்னுமொரு வாகனத்திலும்

[6ஆம் பக்கம் பார்க்க]

# கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(அம்பாறை)

அம்பாறையில் ரோந்து சென்ற விசேட அதிரடிப் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் பல ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

- ரி 56 - 1 - 01
- மகசின் - 01
- ஐ. எம். ரவை - 04
- நேட்டோ ரவை (லிங்குடன்) - 155
- ஆமக்கோர் 40 எம். எம். பிஸ்ரல் - 01
- பிஸ்ரல் ஷெல் - 02
- கோள் கொமாண்டோ - 05
- கோள் கொமாண்டோ மகசின் - 12
- கோள் கொமாண்டோ ஜக்கட் கோல்சர் - 01
- 5.56 ரவை - 575
- ஜே. ஆர். கைக்குண்டு - 01
- ரெயின் கோட் - 02
- கிற்பாக் - 02
- வோக்கி - 01
- தொப்பி - 04
- பைனகுலர் - 01

# ஆனையிறவில் திடீர் மோதல்; மூன்று போராளிகள் வீரச்சாவு

(யாழப்பாணம்)

ஆனையிறவில், சிறிலங்கா இராணுவத்துடன் கடந்த புதனன்று ஏற்பட்ட திடீர் மோதலில் விடுதலைப் புலிகள் போராளிகள் மூவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர். வீரச்சாவடைந்த போராளிகளின் விபரம் வருமாறு;

★ மேஜர் பிரசன்னா (சின்னத்தம்பி சிவகுமார், மிருசுவில் யாழ்ப்பாணம்)

★ கப்டன் வாஞ்சிநாதன் (வேல்முருகு குமார், மட்டக்களப்பு)

★ கப்டன் செந்தாளன்/ஐக்கியலிங்கம் (தெய்வநாயகம் ரவி, மட்டக்களப்பு)

வீரச்சாவடைந்த போராளிகளுக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

# சமாதானத்திற்கு தயாரான நிலையில் இராணுவம் இருக்கின்றதாம்

[கொழும்பு]

சமாதானத்துக்கு தயாரான நிலையில் தற்போது இராணுவம் இருப்பதாகவும் விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்தம் தொடர்பான அறிவிப்பை இராணுவம் எதிர்பார்த்திருப்பதாகவும் இராணுவப் பேச்சாளர் ஒருவர் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சுக்களுக்கு முன்னதாக தாக்குதல் நிறுத்த மொன்றை ஏற்படுத்தி அதன் வழியாக நிலையான

[6ஆம் பக்கம் பார்க்க]

## 2ஆம் லெப். புலிவாணன்

அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன் தினம் ரோந்து சென்ற விசேட அதிரடிப் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்தியதாக்குதலில் புலிகளின் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

2ஆம் லெப் புலிவாணன் [நடராஜா நேசராஜா. அம்பாறை] என்னும்போராளியே இத் தாக்குதல் சம்பவத்தில் வீரச்சாவடைந்தவராவார்.

இவருக்கு புலிகள் தங்கள் வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

## இன்று படகுச்சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

# சந்திரிகா-ஹமில்டன் பேச்சு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் போர் நிறுத்தம் செய்வது குறித்து ஜனாதிபதி சந்திரிகா பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஹமில்டன் மற்றும் முக்கியஸ்தர்களை சந்தித்துப் பேசியுள்ளார்.

நேற்று முன்தினம் காலை ஜனாதிபதி சந்திரிகா முப்படைத் தளபதிகள் மற்றும் படை அதிகாரிகள் சிலரை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. பேச்சுகளின்போது பாதை திறப்பு விடயமும் போர் நிறுத்த விடயமும் ஆராயப்பட்டது.

பாப்பரசரின் வருகையோடு கொண்டுவர தீர்மானித்துள்ள யுத்த நிறுத்தத்தை பின்னர் மேலும் நீடிப்பது குறித்தும் அரச வட்டாரங்களில் ஆராயப்படுகின்றது.

# சமாதான முயற்சி தொடர மக்கள் ஆணை கிடைத்தது

**- கதிர்காமர்**

அமைதி முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு மக்களின் ஆணையை அரசு பெற்றிருக்கிறது எனவும் இதைத் தொடர்ந்து செயற்படுத்துவதற்குகொழும்பு அரசு கடமைப்பட்டிருக்கிறது எனவும் சிறிலங்காவின் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியுள்ளார்.

புதுடில்லியில் நேற்று செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில், விடுதலைப்புலிகளுடனான அரசாங்கத்தின் பேச்சுவார்த்தைகள் இன்னும் ஓரிரு வாரங்களில் மீண்டும் ஆரம்பிக்கும்எனவும் தெரிவித்தார்.

# இரண்டாம் கட்டப் பேச்சுக்களை அரசு உத்வேகத்துடன்எதிர்பார்க்கிறது

**-தர்மசிறி சேனநாயக்கா**

விடுதலைப் புலிகளுடனான இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சுக்களை அரசாங்கம் புதிய உத்வேகத்துடன் எதிர்நோக்குவதாக தகவல் துறை அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்,

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான ஓர் உகந்த சூழ்நிலையை உருவாக்குவதற்கும், சமாதானம் தொடர்பான எதிர்பார்ப்புக்களை எய்துவதற்கும் ஏற்ற வகையில் யுத்தநிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதில் அரசாங்கம் தீவிர முயற்சியெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்,

# ஆந்திர - கர்நாடக சட்டசபை தேர்தல்; காங்கிரஸ் கட்சிக்குப் படுதோல்வி!

## பிரதமர் ராவிற்கு பெரும் அரசியல் நெருக்கடி

[புதுடில்லி]

ஆந்திரா, கர்நாடக மாநிலங்களுக்கு நடைபெற்ற சட்டசபைத் தேர்தல்களில் நரசிம்மராவ் தலைமையிலான இந்திரா காங்கிரஸ் படுதோல்வியை சந்தித்துள்ளது.

இத்தோல்வி பிரதமர் நரசிம்மராவிற்கு பெரும் அரசியல் நெருக்கடியை தந்துள்ளதாகவும் அவதானிகள் கூறுகின்றனர்.

இன்று அதிகாலை வரை வெளியான முடிவுகளின் படி ஆந்திரப் பிரதேசத்தில் என். டி. ராமராவ் தலைமையிலான தெலுங்கு தேசக் கட்சியும், கர்நாடகத்தில் ஜனதா தளமும் பெருமளவு தொகுதிகளில் முன்னணியில் உ ள்ன. இரண்டு மாநிலங்களிலும் இந்திரா காங்கிரஸ் பெருமளவு தொகுதிகள் வித்தியாசத்தில் பின்னுக்கு நிற்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆந்திராவில் தெலுங்கு தேசக் கட்சித் தலைவர் என். டி. ராமராவும், முன்னாள் முதல்வரும் காங்கிரஸ் பிரமுகருமான விஜயபாஸ்கர ரெட்டியும் முன்னணியிலுள்ளனர்.

கர்நாடகாவில் முதலமைச்சர் வீரப்ப மொய்லியும்,

[6ஆம் பக்கம் பார்க்க]

நல்லூர் நூலகம்
யாழ்ப்பாணம்

# வரி விளம்பரம்


**கோழி விற்பனை**

பன்டம், பாமாஸ், பிறிமா சில்கி, கோழி, குஞ்சு விற்பனைக்கு உண்டு, விபரங்கட்கு க. வித்தியானந்தன், சம்மந்தப் பிள்ளையார் கோவிலடி, சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை. (10327)

**புதிய வகுப்புக்கள்**

ஆண்டு 3 முதல் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் ஆரம்பமாயுள்ளன. கணிதம் சுந்தரம், விஞ்ஞானம் சிவா, தமிழ் வேலாயுதபிள்ளை, ஆங்கிலம் நடராசா, சமூகக் கல்வி சிவராசா ஆண்டு 3,4,5, தமிழ், கணிதம் அம்பிகைபாகன் புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (10325)

**விற்பனைக்குண்டு**

கொக்குவில் கிழக்கு இலக்கம் 106 பொற்பதி வீதியில் இருபக்க வழி, சுற்றுமதிலும் உள்ள 4 பரப்பு காணியில் சகல வசதிகளும் கொண்ட 5 அறைகளுடன் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு 102/3, பொற்பதி வீதி, கொக்குவில். (10348)

**விற்பனைக்கு**

10 மாதம் நிரம்பிய அல்ஷேசன் நாய்க் குட்டி விற்பனைக்கு. தொடர்பு:- சதீஸ்வரன் 83, கல்லூரி வீதி நீராவியடி. (10338)

**தையலாளர்கள் தேவை**

பெண்களினதும், ஆண்களினதும் உடைகள் தைக்கக் கூடிய அனுபவமுள்ள தையலாளர்கள் தேவை. இருபாலரும் விரும்பத்தக்கது. தொடர்பு :- ஜெகா தையலகம். 729, கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம். (10337)

**ஆண்டு 5**

ஆண்டு 5 (புலமைப்பரிசில் 1995) மாதிரி வினாத்தாள் (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 11. 12. 94 ஞாயிறு வெளியிடப்படும். புதிய வகுப்புகளும் ஆரம்பமாயுள்ளன. புதிய கல்வி நிலையம் 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (10351)

**புலமைப் பரிசில் BRIGHT இன் புத்தகங்கள்**

புலமைப்பரிசில் 5-ம் ஆண்டு கணிதம் ரூபா 60, தமிழ் ரூபா 50, கட்டுரை மஞ்சரி ரூபா 50, கிடைக்கும் இடங்கள்: பூபாலசிங்கம் புத்தகசாலை, தனலட்சுமி புத்தகசாலை, நாயகபாலன் புத்தகசாலை, சிவம் மெடிக்கல் புத்தகசாலை, மொடேண் புத்தகசாலை, ஆசீர்வாதம் புத்தகசாலை. (10308)


# பாப்பரசர் பாதுகாப்பு வாகனம் விமானத்தில் கொழும்பு வரும்

(யாழ்ப்பாணம்)

பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் ஜனவரிமாதம் 20 ஆம் திகதி கொழும்பு வருவதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாப்பரசரின் பாதுகாப்புக் கருதி பாதுகாப்பு வாகனமான 'போப் மொபைல்' எனும் வாகனம் விமானத்தில் ஏற்றிக் கொழும்பிற்கு கொண்டு வரப்படவுள்ளது. பாப்பரசர் அந்த வாகனத்திலேயே கொழும்பில் பிரயாணத்தை மேற்கொள்வார், இவ்வாகனம் பாதுகாப்பு கண்ணாடி கூண்டை கொண்டிருக்கும்.

பாப்பரசரின் வருகைக்காக கொழும்பு காலிமுகத்திடல் களைகட்ட ஆரம்பித்துள்ளது. தற்போது காலிமுகத்திடலில் அலங்காரவடிவமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

20 ஆம் திகதி வந்து சேரும் பாப்பரசர் சரியாக 26 மணித்தியாலங்கள் மட்டும் கொழும்பில் தங்கியிருப்பார். 21 ஆம் திகதி காலை யாத்திரீகர்களுக்கு பாப்பரசர் காலிமுகத்திடலில் வழிபாடு நடத்துவார்.

இந்த நிகழ்வில் சுமார் 5 இலட்சம் மக்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கு விசேட சமய நிகழ்ச்சியும் நடைபெறும்.

(தி) (பா) (இ)

# 19 ஆங்கில ஆசிரியர்கள் யாழ். நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு புதிதாக 19 ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தராதரப்பத்திரமுள்ள ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ள இவர்களில் 7 ஆசிரியர்களுக்கு யாழ். கல்வி வலயம் - 1 ற்கும், 12 ஆசிரியர்கள் யாழ் வலயம்-2 ற்கும் நியமனம் பெறுகின்றனர்.

போட்டிப்பரீட்சையில்சித்தியெய்திய இவர்களுக்கான சேவை முன் பயிற்சி யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்று முடிவடைந்தது. எனினும் நியமனக் கடிதம் வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்தை நீக்கி உடன் நடவடிக்கை எடுக்கும்படி கல்விச்சேவைச் சபையையும், வடக்கு-கிழக்கு மாகாணக்கல்விஅமைச்சையும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியமையால் தற்போது இந்நியமனங்கள்வழங்கப்பட்டுள்ளன தெரிவு செய்யப்பட்ட 19 தராதரப்பத்திரமுள்ள ஆசிரியர்களதும் பெயர் பட்டியலை நல்லூரிலுள்ள இ. த. ஆ. சங்கத்தின் தலைமைப்பணிமனையில் பார்வையிடலாம்.

# தொடர்பு சாதனங்களும் இனபிரச்சினைக்கு காரணம்

## இ. தொ. கா. உபதலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு பிரச்சினை இத்துணை தூரம் பூதாகரமாக வளர்வதற்கு மக்கள் தொடர்பு சாதனங்களும் பிரதானமான காரணமாகும். இவ்வாறு மத்திய மாகாண சபையின் உறுப்பினரும், இ. தொ. காவின் உபதலைவருமான கந்தசாமி கூறியுள்ளார்.

தலவாக்கல நகரிலுள்ள இ. தொ. கா அலுவலகத்தில் சண்டே லீடரின் செய்தியாளர்கள் சந்தித்த போது பேசிய கந்தசாமி மேலும் கூறுகையில், பத்திரிகைகள் நாட்டின் முன்னேற்றத்திற்கு ஒரு போதும் உதவுவதில்லை. பதிலுக்கு அழிவையே தேடிக் கொடுத்துள்ளன. செய்தியாளர்கள் பெரும்பாலும் பெரும் பணமுதலைகளினதும், தொழில் அதிபர்களினதும் கைக் கூலிகளாக செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

# லொறி மோதியவர் மரணம்

கிளிநொச்சியில் விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்து கடந்த ஐந்தாம் திகதி யாழ். போதனா மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக கொண்டு வரப்பட்டவர் நேற்று யாழ். போதனா மருத்துவமனையில் மரணமானார்.

கிளிநொச்சி155ஆம்கட்டை கிருஷ்ணபுரத்தைச் சேர்ந்த செ. மகாலிங்கம் (வயது 45) என்பவரே மரணமானவராவார். இவர் கிளிநொச்சிப் பகுதியில் லொறி மோதியதில் படுகாயத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டது.


## நூல் அறிமுக விழா

கலாநிதி கா. குகபாலன் அவர்களின்

**தீவகம்-வளமும் வாழ்வும்**

வெளியீடு: தீவக கோட்ட கூட்டுறவு ஒன்றியம்
இடம்: குமாரசுவாமி மண்டபம் யாழ். இந்துக் கல்லூரி
காலம்: 11-12-1994 ஞாயிறு பிற்பகல் 3-30 மணி
தலைமை: பேராசிரியர் செ. பாலச்சந்திரன் (தலைவர், புவியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்.)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

32/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தீவகக் கோட்ட கூட்டுறவு ஒன்றியம்

விளம்பர அன்பளிப்பு:
அம்பிகை களஞ்சியம்
304, (110) கேணல் கிட்டு சாலை, யாழ்ப்பாணம்.
(சி-10887)

## ஒஸ்லோ கல்வி நிலையம்

(கச்சேரி நல்லூர் வீதி, யாழ்.)

## பதவி வெற்றிடம்

எமது நிறுவனத்திற்கு அனுபவமும் ஆற்றலுமுள்ள

1. அச்சு இயந்திர இயக்குனர்
2. புத்தகம் கட்டுனர்:- அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்


## நினைவு கூருகின்றோம்...

### 10.12.1994

1994ஆம் ஆண்டு இதேதினத்தில் பூநகரி - சங்குப்பிட்டிப் பகுதியில் சிறிலங்காஇராணுவத்தினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய-

★ **விக்ரர்/ சுமித்திரன்** (விக்ரர் டலீமா-பேசாலை மன்னார்)

1985ஆம் ஆண்டு கிளி-கரடிப்போக்குப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**புள்ளி / ஜெயராம்** (கந்தசாமி மோகனகாந்தன் 32, சுண்டுக்குளி -யாழ்)

1988ஆம் ஆண்டு திருநெல்வேலியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகளின் சுற்றிவளைப்பின் போது தன்னைத்தானே சுட்டு வீரச்சாவெய்திய-

யாழ் மாவட்டத் தளபதியான,

**லெப் கேணல் மதி** (சுப்பிரமணியம் பாலச்சந்திரன் -செல்வபவனம் - மல்லாகம்)

1992ஆம் ஆண்டு மட்டு- மணற்பிட்டி, செம்பூர்ப் பகுதியில் இயக்கவேலையாகச் சென்றுகொண்டிருந்த போது சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**மேஜர் வித்தியாதரன்/ டேவிட்** (இரத்தினசிங்கம் அரசரத்தினம்- அம்பிலாந்துறை -மட்டு)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும், கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும் இந்தியப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10883)

## 4ஆம் ஆண்டு நீங்காத நினைவுகள்



அன்னையின் மடியில்
18-03-1948

ஆண்டவன் அடியில்
10 12-1990

ஆண்டு 4 முதல் 11 வரை

புதிய வகுப்புகள்

ஆரம்பம்: 11-12-1994 (ஞாயிறு)

காலை 7 மணி

(10350)



2. புத்தகம் கட்டுனர்:- அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

தகைமை சான்றிதழ்களுடன் வருகிற புதன்கிழமை காலை 10 மணிக்கு எமது காரியாலயத்திற்கு நேரில்வரவும்

## அந்திவானம் பதிப்பகம்

நாவலர் வீதி (கல்லூரி ஒழுங்கை)
யாழ்ப்பாணம்.

(10349)




## அமரர் ஆறுமுகம் குணரத்தினம்

L. L. B. ATTORNEY-AT-LAW

(உதவிப்பதிவாளர் யாழ். பல்கலைக்கழகம்)

திதி: 27-11-1994

ஆண்டுகள் நான்கென்ன நாற்கோடி சென்றாலும்
நினைவுகள் உங்கள் அன்பு நெஞ்சைவிட்டு அகலாது-
அப்பா

பார்க்கும் இடங்களெல்லாம் உங்கள் முகம்!
கேட்கும் ஒலிஎல்லாம் உங்கள் ஒலி!
மண்ணைவிட்டு மறைந்தாலும்-எங்கள்
மனதைவிட்டு அகலாது.

அன்பு அப்பாவின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்,

கைலாயபிள்ளை வீதி, சங்கத்தானை. — அன்பு மனைவி, பிள்ளைகள்

(10331)


வெளிவந்துவிட்டது!

# சாளரம்

ஒக்ரோபர் - நவம்பர்

- ★ அரசியல் கட்டுரை
- ★ நிலாமுற்றம்
- ★ ஓவியர் மார்க் அவர்களின் நேர்காணல்
- ★ தொழில் நுட்பவியல்
- ★ விளையாட்டு

மேலும் பல்வேறு பயன்தரக்கூடிய விடயங்கள்

**மாணவர்களே!**

பாடசாலை விடுமுறை நாள் என்பதால் அருகேயுள்ள புத்தக நிலையங்களில் உங்கள் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள் அல்லது எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்புக்கு

**சாளரம்**

இல. 2, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-10884)



## யாழ். மாவட்டக் கூட்டுறவு பயிற்சிக்கல்லூரி

கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர சாதாரண பிரிவுப் பயிற்சிநெறி விண்ணப்பங் கோரல்

16-1-95 அன்று ஆரம்பமாக இருக்கும் மேற்படி பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப படிவங்களை 10 ரூபா செலுத்தி கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதி 20-12-94.

இல. 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். — அதிபர்

(சி-10886)


## கண்ணீர் அஞ்சலி

### செல்வன் பா. ரிதுசான்

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைச் செயலாளர் திரு. கு. ந. பாலசந்திரன் அவர்களின் மகன் ரிதுசானின் இழப்பையொட்டி அவரது குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துகின்றோம்.

விசேட ஆணையாளர்,
உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை

(10353)


ஜோ. எகட்டனின்

ஜெசித்தாரா வழங்கி வரும்

வழமையான உணவுப் பார்சல்களை தடையின்றி தாமதமின்றி முற்பகல் 11.45 மணி முதல் பிற்பகல் 3.30 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

விலை விபரம்:

மரக்கறி 30/-
இறைச்சி 35/-
மீன் 45/-

உணவுப் பொதிகளை உங்கள் சட்டைப் பைகளுக்கு ஏற்றவாறும் பொதிபண்ணித் தரப்படும்.

பதிவுகள் முன்கூட்டி ஏற்கப்படும்

**ஜோ. எகட்டனின்**

## ஜெசித்தாரா

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை)
சுண்டுக்குளி

எமக்கு வேறு கிளைகளோ முகவர்களோ இல்லை
புதுயுகத்தில் புது உருவம்
ஜெசித்தாரா

(சி-10865)

# நாலரை வருடங்களில் 266 மீனவர்கள் கடற்படையினரால் படுகொலை

## 14 மீனவர்கள் கைது; 81 பேர் காணாமற் போயுள்ளனர்

(வடமராட்சி)

யாழ். மாவட்டத்தில் 1990-ம் ஆண்டு யூன் மாதத்திற்குப் பின்னர் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையையடுத்து கடற்படையினரால் இதுவரை 266 அப்பாவி மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 14 மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டும் 81 மீனவர்கள் காணாமல் போயுமுள்ளனர்.

யாழ். மாவட்ட கடல் பகுதிகளில் சுயதொழிலை செய்து வந்த அப்பாவி மீனவர்களுக்கு எதிராக சிறிலங்கா அரசாங்கம் கொண்டு வந்த கடல்வலயச் சட்டத்தையடுத்து மேற்குறித்தோர் இறந்தும். கைது செய்யப்பட்டும், காணாமலும் உள்ளனர்.

சாதாரண கணிப்பீடு ஒன்றின் மூலம் இப்புள்ளி விபரங்கள் கிடைத்துள்ளன. மேலும் மீனவர்கள் பற்றிய விபரங்கள் ஆராயப்பட்டும் வருகின்றன. முந்நூறுக்கு மேற்பட்டோர் கடற்படையினரின் சூட்டுக்கு இலக்காகி சிறு சிறு காயங்களுக்கும் பெரும்பாதிப்புகளுக்கும் இலக்காகியுள்ளனர். எனினும் அது பற்றிய விபரங்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

மீனவர்கள் தொழிலுக்குப் பயன்படுத்தும் தொழில் உபகரணங்களுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. பல, கோடிக் கணக்கில் வள்ளங்கள் இன்ஜின்கள், படகுகள், பல தரப்பட்ட வலைகள் கடற்படையினரால் நாசமாக்கப்பட்டும் கடலில் வீசப்பட்டதினால் இச் சேதம் ஏற்பட்டுள்ளது.

வடமராட்சியிலேயே கூடுதலான மீனவர்கள் கடற்படையினரால் கொல்லப்பட்டுள்ளனர். வடமராட்சி வடக்கு பிரதேசத்தில் 128 மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். வடமராட்சி கிழக்கில் 31 மீனவர்கள் காணாமல் போயுள்ளனர்.

மேலும் வலிகாமம் மேற்கு ஒன்றியம்காரைநகர்ஒன்றியம் தீவக ஒன்றியம், மண்டைதீவு கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு, குருநகர் கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு ஆகியவற்றில் மொத்தமாக 73 மீனவர்கள் கொல்லப்பட்டும், 31 மீனவர்கள் காணாமலும் 10 மீனவர்கள் கைது செய்யப்பட்டும் உள்ளனர்.

இதைத்தவிர வடமராட்சி கிழக்கில் 65மீனவர்கள்கொல்லப்பட்டுள்ளனர். குடும்பத் தலைவர்களும், இளைஞர்களுமே இவ்வாறு கொல்லப்பட்டும், காணாமல்போயும், கைது செய்பப்பட்டவர்களுமாவார்கள். யாழ். மாவட்டத்தில் வல்வெட்டித்துறை கடல் தொழிலாளர் கூட்டுறவுச்சங்கப் பிரிவில் மட்டும் 65 மீனவர்கள் கொல்லப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(யோ)

# ஐ.தே.கவின் நடவடிக்கை குறித்து தொண்டா கருத்துக்கூற மறுப்பு

(கொழும்பு)

இ.தொ.காவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான நடவடிக்கை எடுப்பதற்கு ஐ.தே.கவின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஐ.தே.க. செயற்குழு அனுமதி அளித்திருப்பது தொடர்பாக கருத்து எதையும் கூற இ.தொ.காவின் தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமான் மறுப்பு தெரிவித்து விட்டார்,

பாராளுமன்றத்தில் இடைக்கால வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில்இ.தொ கா. அரசைஆதரித்துவாக்களித்தது தெரிந்ததே அமைச்சர் தொண்டமான் கூறுகையில் இ.தொ.காவின் ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பது ஐ தே.கவின் செயற்குழுவின் தீர்மானம். எனவே அவர்களிடம்தான் என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றனர் என்பது பற்றிக் கேட்க வேண்டும், இது பற்றி நான் கூறுவதற்கு எதுவும் இல்லை எனத்தெரிவித்தார்.

# வியாங்கொடைக் கொள்ளை 3 பொலிஸ் குழு விசாரணை

(கொழும்பு)

வியாங்கொடையில் கடந்த புதனன்று இடம்பெற்ற 80 லட்சம் ரூபா கொள்ளைச் சம்பவம் தொடர்பான சந்தேக நபர்களை கண்டு பிடிப்பதற்கு மூன்று குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகபொலிசார் தெரிவித்துள்ளனர்.

வியாங்கொடையிலுள்ள புடவை ஆலை ஊழியர்களுக்கு சம்பளமும் முற்பணமும் கொடுப்பதற்காக எடுத்துவரப்பட்ட பணமே வானொன்றில் தன்னியக்க துப்பாக்கிகளுடன் வந்த நபர்களால் வழிமறிக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டது தெரிந்ததே.

# இனப்பிரச்சினை தீர்வில் மதவாதிகளும் ஈடுபடவேண்டும்

## பௌத்த பிக்குகள் குழு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இரு இனங்களுக்கிடையே சமாதானம் ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் மதவாதிகளும் அக்கறை செலுத்த வேண்டும் என பௌத்த குருமார் ஐவர் கொண்ட குழுவினர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

... கள விமல ஆரிய தேரோ ஆகியோரும் அடங்குவர்.

இரண்டு பகுதியினரும் விட்டுக் கொடுத்து சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும். அரசியல் வாதிகளிடம் மட்டும் இப் பொறுப்பை ஒப்படையாது, நாமும் முயற்சியெடுக்க வேண்டும் என்று தீர்வு ஒன்றை பரிசீலிக்கத் தயாராக இருக்கிறோம் எனக் கூறியுள்ளார் எனச் சுட்டிக் காட்டினார்.

மேலும் 20 வயது தமிழ் இளைஞனுக்கோ யுவதிக்கோ சிங்களவன் என்றால் இராணுவம் என்றே தெரியும். துப்பாக்கியை ஏந்திச் சுடும்

# எம்.ஜி.ஆர் ஆண்டு நினைவு

முன்னாள் தமிழக முதல்வர் எம். ஜி. ஆரின் 7ஆம் ஆண்டு நினைவு நாள் எதிர் வரும் 24 ஆம் திகதி முதல் மூன்று தினங்களுக்கு கொக்குவிலில் நடைபெறவுள்ளது. இதனையொட்டி பல கலை நிகழ்வுகளும் விளையாட்டு நிகழ்வுகளும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

# வடக்கு - கிழக்கிலிருந்து 1875பொலிசார் இடமாற்றம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கிலிருந்து1875 பொலிசாரை - எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் தென்பகுதிக்கு இடமாற்றம் செய்யுமாறு உத்தரவிடப்பட்டுளளது.

வடக்கு- கிழக்கில் 5 வருடங்களுக்கும் மேலாக சேவையாற்றிய இவர்களை உடனடியாகஇடமாற்ற உத்தரவு பிறப்பிக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு பிரதி பாதுகாப்பு அமைச்சர் பணிப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சதி செய்பவர்களைக் கண்டறிய ஜனாதிபதியால் குழு ஒன்று அமைப்பு

## சகல அதிகாரிகளையும் கண்காணிக்க நடவடிக்கை

[கொழும்பு]

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தற்பொழுது மிகப் பெரிய நெருக்கடி நிலையை எதிர்நோக்கி இருக்கிறார்.

அவரது அரசிற்கு மிகப் பெரிய சதி வேலைகளைச் செய்வதற்கு சில அதிகாரிகள் திட்டமிட்டது தெரியவந்துள்ளது.

இதனால் தனது அரசிற்கு எதிராக இயங்கும் அதிகாரிகளைக் கண்டு பிடிக்க குழு ஒன்று ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுளளது.

இந்தக் குழு அரசாங்கத்தில் எல்லா துறைகளிலும் உள்ள உயர் அதிகாரிகளின் நடவடிக்கைகளை கண்காணித்து ஜனாதிபதிக்கு தகவல்களைத் தெரிவிக்கும்

முன்னைய ஐ. தே. கட்சி ஆட்சியின் போது ஊழல் மோசடிகளின் மூலம் தமது பொருளாதாரப் பலத்தை அதிகரித்துள்ள பல அதிகாரிகள் தற்பொழுது பொ. ஐ. முன்னணி அரசிற்கு எதிராக சதி வேலைகளிற்கு திட்டமிடுவதாக கூறப்படுகிறது.

இவர்களை அடையாளம் கண்டு இவர்களது நடவடிக்கைகளை அவதானித்துஇவர்களது சதி வேலைகளில் இருந்து அரசைக் காப்பாற்றவே இக்குழு நியமிக்கப்பட்டது என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

[இ, நி]

கூ. மொ. வியாபார நிலைய

# பொது முகாமையாளருட்பட பலருக்கு கட்டாய லீவு

(கொழும்பு)

கூட்டுறவு மொத்த வியாபார நிலையத்தின் பொது முகாமையாளர் கட்டாய விடுமுறையில் செல்லும்படி பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண வியாபாரி ஒருவரின் பெயரில் போலியான ரசீதுகளை தயாரித்து இவர் புறக்கோட்டையில் பெருமளவு மைசூர் பருப்பை விற்க முற்பட்டது தெரிந்ததே. இதனைத் தொடர்ந்தே பொது முகாமையாளர் கட்டாய லீவில் செல்லும்படி பணிக்கப் பட்டுள்ளார்.

கூ.மொ,வி உட்பட வர்த்தக வாணிபத்துறை அமைச்சுக்கு கீழுள்ள நிறுவனங்களில் நடைபெற்ற ஊழல் மற்றும் மோசடி என்பன தொடர்பாக விசாரணை செய்யும் குழு இப்பருப்பு மோசடி தொடர்பாக விசாரணை நடத்தி இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்க இருக்கிறது. இடைக்கால அறிக்கையின்படி இந்த மோசடியுடன் தொடர்புடையவர்கள் மற்றும் உடந்தையாக இருந்தவர்கள் அனைவரும் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படவுள்ளனர்.

# ராணுவத்திற்கு மாற்றப்பட்ட அமெ. உதவிப் பொருட்கள்

(கொழும்பு)

அமெரிக்கா அனுப்பிய உதவிப் பொருட்களில் சிறிலங்கா இராணுவத்திற்கு கைமாற்றப்பட்ட பொருட்களின் விபரம் வெளிவந்துள்ளது.

ஆறு அம்புலன்ஸ் வண்டிகள், நடமாடும் சத்திரசிகிச்சை வண்டிகள், குளிரூட்டிப் பெட்டிகள், ஐம்பதிற்கும் மேற்பட்ட கட்டில்கள், மருந்துப் பொருட்கள் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுளளது.

# வடக்கிலிருந்து திரும்பிய

# ஒழுக்கம் கட்டுப்பாடுகள் பாடசாலைகளில் இல்லை.

## பிரிட்ஜெட்கான்வென்டில் பிரதமர் சிறிமா

(கொழும்பு)

எனது பாடசாலை நாட்களில் எப்போதும் ஒழுக்கத்துடன் செயற்பட்டுளளேன். அன்று முதல் இது தொடர்ந்து வருகிறது. இவ்வாறு பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க சென்ற பிரிட்ஜெட் கான்வென்டின் பழையமாணவர் ஹோட்டல் லங்கா ஒபரோயில் அளித்த இரவுணவு விருந்தில் கலந்து கொண்டு பேசும் போது தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும்போது கட்டுப்பாட்டுக்கும், ஒழுக்கத்துக்கும் பெயர் பெற்றவர்களான அயர்லாந்து நாட்டின் அருட் சகோதரிகளால் இப்பாடசாலை நடாத்தப்பட்டது. அப்போது ஒழுக்கமும் கட்டுப்பாடும்பெரிதும் பேணப்பட்டது. இப்போது அந்த நிலை தென்படுவதாக இல்லை எனவும் குறிப்பிட்டார்.

இவ் விருந்திற்கு இப் பாடசாலையின் பழைய மாணவியான பிரதமர் திருமதி சிறிமாவோ குறிப்பிட்ட நேரத்திற்கு வந்திருந்த போதும், மற்றுமொரு பழைய மாணவியான ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 45 நிமிடங்கள் பிந்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. இப் பாடசாலையின் பழைய மாணவர்களான முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா உட்பட பல முக்கிய பிரமுகர்கள் இவ் வைபவத்தில் பங்கு பற்றியது குறிப்பிடத்தக்கது.

# சந்திரிகா நம்பிக்கை

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வுக்கான புலிகளுடனான பேச்சுகளில் முக்கிய திருப்பம் ஏற்படும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முழு நம்பிக்கையுடன் இருப்பதாக தகவல்துறையமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

சுன்னாகம்
வணிகர் கழகம் விடுக்கும்
முக்கிய அறிவித்தல்

குருமார் ஐவர் கொண்ட குழுவினர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

சமீபத்தில் பொறளையில் உள்ள ஆயர் காரியாலயத்தில் யாழ், மன்னார், மட்டக்களப்பு ஆயர்களுக்கிடையேயும் பௌத்த குருமார் குழுவினர்களுக்கிடையேயும் ஒரு சந்திப்பு நடைபெற்றது. இச் சந்திப்பிலேயே பௌத்த குருமார் மேற்படி கருத்தைத் தெரிவித்தனர்.

பௌத்த குருமார் குழுவில் சோபித தேரோ, சுமங்

டும் இப் பொறுப்பை ஒப்படையாது, நாமும் முயற்சியெடுக்க வேண்டும் என்று பௌத்த குருமார் தரப்பில் குறிப்பிடப்பட்டது.

சிங்கள பௌத்த பேரினவாதம் அடிமட்ட மக்களிடம் இல்லை. சிலர் சுயநலத்துடன் இப் பேரின வாதத்திற்குள் இருக்கிறார்கள் எனவும் அக் குழுவினர் குறிப்பிட்டனர்.

இந்த வேளையில், யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் தலைவர் பிரபாகரன் ஈழத்திற்கு சமனான

சிங்களவன் என்றால் இராணுவம் என்றே தெரியும். துப்பாக்கியை ஏந்திச் சுடும் சிங்களவர்களையே தெரியும் என்றார்.

பௌத்த குருமார் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், இந்துக் குருமாரும் சேர்ந்து சமாதான வழிக்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். யாழ் மாவட்ட மக்களை சந்தித்து அவர்களுடன் பேசுவதற்கு நாம் விரும்புகிறோம். எனவும் குறிப்பிட்டனர். (தி, பா, இ)

ளது.

தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கிலிருந்து திரும்பிய குடும்பஸ்தர் மரணம்

(வவுனியா)

பருத்தித்துறையில் உள்ள தனது தாயாரை பார்த்துவிட்டு திருமலைக்கு தனது குடும்பத்துடன் திரும்பியவர் வவுனியாவில் திடீர் சுகவீனமுற்று மரணமானார்.

கடந்த இரண்டாம் திகதி இச்சம்பவம் நடைபெற்றது.

திருமலை லிங்கநகரை சேர்ந்த சோ. பாலேந்திர மோகன் (வயது 32) என்பவரே மரணமானவராவார். காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த இவர் திரும்பும் வழியில் மழையில் நனைந்ததால் பலவீனமடைந்ததாக இவரின் உறவினர் தெரிவித்தனர்.


## முக்கிய அறிவித்தல்

எமது கழக எல்லைக்குட்பட்ட அனைத்து வணிக நிலையங்களும் எமது கழகத்தால் தரப்பட்ட ''வணிக நிலையத்தின் விபரம்'' 3 பத்திரங்களையும் எதிர்வரும் 14-12-94 புதன்கிழமைக்கு முன்பதாகப் பூர்த்தி செய்து கழகப் பணிமனையில் ஒப்படைக்குமாறு கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம். இக்குறிப்பிட்ட திகதிக்குள் கையளிக்கத் தவறுவோருக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதனையும் அன்புடன் அறியத் தருகிறோம். இது வரை ''வணிகர் நிலையத்தின் விபரம்'' பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக கழகப் பணிமனையில் நேரடியாக வந்து பெற்று அதனைப் பூர்த்தி செய்து தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

- சுன்னாகம் வணிகர் கழகம்

(சி-10885)


## உலகில் எனது ஏ.கே துப்பாக்கிகள் இயங்க அரசியல்வாதிகளே காரணம்

### மிகெயில் கலாஷ்னிகோவ் தெரிவிப்பு

(மாஸ்கோ)

உலகில் தற்போது நடைபெறும் அநேகமான மனித கொலைகளுக்கு ஏ.கே. ரக துப்பாக்கியை முதன் முதலில் வடிவமைத்த மிகெயில் கலாஷ்னிகோவ் தார் மிகப் பொறுப்பு ஏற்க வேண்டும் என்ற குற்றச்சாட்டை அவர் நிராகரித்துள்ளார்.

உலகில் நடைபெறும் கொலைக்கு உயிரற்ற என் காலஷ்னிகோவ் துப்பாக்கிகள் காரணமல்ல அவை இயங்க காரணமாக இருக்கும் அரசியல் வாதிகளே இதற்கு பொறுப்பாகும் என அவர் குறிப்பிட்டார். அண்மையில் அவரது 75 ஆவது பிறந்த தினம் ரஷ்ய அரசால் உத்தியோக பூர்வமாக கொண்டாடப்பட்டது. இவ்வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய ரஷ்ய ஜனாதிபதி யெல்சின் ''நீங்கள் எடுத்த முயற்சியும் உழைப்பும் உலக வரலாற்றில் சிறப்பு மிக்க துப்பாக்கி ஒன்றை உருவாக்க வழிவகுத்தது. இது எமது நாட்டையும் பலமாக வைத்திருக்க உதவியதையிட்டு நாம் பெருமிதம் அடைகின்றோம்'' என்றார்.

கலாஷ்னிகோவிற்கு மேஜர் ஜெனரல் பட்டம் வழங்கி கௌரவித்த ரஷ்ய ஜனாதிபதி ரஷ்யாவின் அதி உயர் விருதான ஓர்டர் ஒப் சென் விளாடிமீர் என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தார்.

மிகெயில் கலாஷ்னிகோவ் வடிவமைத்த ஏ.கே ரக துப்பாக்கிகள் கடந்த 25 ஆண்டுகளில் 55மில்லியன் விற்பனையாகியுள்ளன. இவற்றின் உற்பத்தி இன்னமும் தொடர்வது குறிப்பிடத்தக்கது.

நாம் ஏ.கே ரக துப்பாக்கிகளை வடிவமைத்தமைக்கான காரணத்தை கலாஷ்னிகோவ் குறிப்பிடுகையில், நான் இரண்டாம் உலகப் போரில் சர்ஜன்ட் தரத்தில் சோவியத் டாங்கிபடையில் பணியாற்றினேன். போரின் போது எமது படைகள் எத்தகைய மோசமான துப்பாக்கிகளுடன் போரிடுகின்றனர் என்பதை அறிந்தேன். போரில் காயமடைந்த நான் வைத்தியசாலையில் இருந்தவாறு எனது துப்பாக்கியை வடிவமைக்க ஆரம்பித்தேன். 1947 இல் தான் முதலாவது துப்பாக்கி உற்பத்தி நிகழ்ந்தது என்றார்.

## பாரிசில் கைதானார்

(பாரிஸ்)

1989 ஆம் ஆண்டு இடம் பெற்ற பிரெஞ் விமான குண்டு வெடிப்பு சம்பந்தமாக லிபிய உளவு அமைப்பு உறுப்பினர் ஒருவர் பிரெஞ் அதிகாரிகளால் கைதாகியுள்ளார். கைதான அலிஓமார் மன்சூர் லிபிய உளவு சேவையின் ஓர் அதிகாரி என பிரான்ஸ் கூறியுள்ளது.

ஆனால் மன்சூர் அப்பாவி என்றும் வைத்திய சிகிச்சைக்காகவே அவர் பிரான்ஸ் சென்றார் என லிபியா அறிவித்துள்ளது. ஓஹாரா பாலைவனத்தின் நைகர் மேல் பிரெஞ் விமானம் குண்டு வெடிப்பிற்குள்ளானதில் 171 பேர் பலியாகினர். இது தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் மன்சூரும் ஒருவர் எனக் கூறப்படுகின்றது.

## பி.எல்.ஓவுடனான ஒப்பந்தம் இஸ்ரேல் பாராளுமன்ற ஆதரவு

(டெல் அவிவ்)

இஸ்ரேல் பாராளுமன்றம் மூன்றுநாள் விவாதத்தின் பின் பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் செய்து கொண்ட சமாதான உடன்படிக்கைக்கு அதன் ஆதரவை நேற்றுமுன்தினம் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த உடன்படிக்கையில் ஒருதலைப்பட்சமாக மாற்றம் செய்யப்பட்டால் அது சீர்குலைந்து விடும் என பாலஸ்தீன விடுதலை இயக்கம் இஸ்ரேலை முன்னதாக எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் ஷெமோன் பெரஸ்சும் பி.எல்.ஓ. தலைவர் அரபாத்தும் பாலஸ்தீன தேர்தல் பற்றி பேச்சு நடத்தியுள்ளனர்.

## யுத்த அட்டூழியங்களுக்கு ஜப்பான் பொறுப்புஉள்ளது

(ஸ்டொக்ஹோம்)

இரண்டாம் உலக யுத்த கால அட்டூழியங்களுக்கு ஜப்பான் பொறுப்பேற்க வேண்டும் என இலக்கியத்திற்கான இம்முறை நோபல் பரிசு பெற்ற ஜப்பானியரான கென்ஸாபுரோ ஒயி தெரிவித்துள்ளார்.

உண்மையில் நாங்கள் குற்றவாளிகள் குறிப்பாக ஆசியாவில் நாங்கள் செய்தவை தவறுகள் தான் என ஒயி (59) நோபல் பரிசை பெறுவதற்காக ஸ்டொக்ஹோமுக்கு வந்த பின் நிருபர்கள் மாநாட்டில் பேசுகையில் தெரிவித்தார்.


## வாழ்த்துகின்றேன்



உடுவில் மகளிர் கல்லூரியில் கல்வி பயிலும் உடுவிலைச் சேர்ந்த செல்வி விஜயகாந்தன் விஜயரோகினி 1994-ம் வருடத்திற்குரிய ஆண்டு 5ற்கான புலமைப் பரிசில் தேர்வில் சித்தியடைந்துள்ளார். இவர் கல்வித்துறையில் மென்மேலும் சிறப்புப்பெற்று சீரோடு வாழ வாழ்த்துகின்றேன்.

- சிவநாதன்

(10340) (மாமா)

## வணிக ஊழியர் கழகம், யாழ்ப்பாணம்

### முக்கிய அறிவித்தல்

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல வணிக நிலையங்களில் வேலை பார்க்கும் ஊழியர்கள் அனைவரும் வணிக ஊழியர் கழகத்தில் பதிந்து அங்கத்தவராக சேர்ந்து கொள்ள வேண்டும். அங்கத்தவராகப் பதிவு செய்யாமல் வணிக நிலையங்களில் ஊழியர்கள் வேலை பார்க்க அனுமதிக்க முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். ஆகவே எமது கழக பணிமனையில் உடன் வந்து அங்கத்தவராகப் பதிவு செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம். கழகத்தில் அங்கத்தவராகச் சேர்ந்து எம்முடன் ஒத்துழைக்க முடியாதவர்கள் அதற்குரிய காரணத்தை எழுத்து மூலம் எமது கழகத்துக்கு அனுப்பி வைக்கவும்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு

(சி-10881) - நிர்வாகசபை


## மழை பெய்யும் காலநிலை

கிழக்கு மாகாணம் மற்றும் முல்லைத்தீவு அநுராதபுரம், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களில் பரவலாக மழைபெய்யக்கூடிய கால நிலை நிலவுவதாக வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

## சிறிலங்கா முன்னணி

வன்முறைகள், சித்திரவதைகளில் சிறிலங்கா முன்னணி வகிப்பதாக கடந்த அக்டோபர் மாதம் ஆர்ஜன்டீனா தலைநகர் புவனர்ஸ் அயர்சில் நடைபெற்ற வன்முறை சித்திரவதைகளுக்கெதிரான சர்வதேச மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (27)

# வடக்கு கிழக்கினுள் 39 ஆசிரியர்கள் இடமாற்றம்

### பட்டியலும் வெளியானது

யாழ். மாவட்டத்திற்கு வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஏனைய பாகங்களிலிருந்து 12 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படும் அதே சமயம் 17 ஆசிரியர்கள் யாழ் மாவட்டத்தில் இருந்து வடக்கு கிழக்கிலுள்ள ஏனைய மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்றுள்ளனர்.

வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் முதலாவது இடமாற்றப் பட்டியல் வெளிவந்துள்ளது. இப்பட்டியல் வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள மாவட்டங்களுக்கு இடையிலான இடமாற்றத்தில் மொத்தமாக 39 ஆசிரியர்கள் இடமாற்றம் பெறுகின்றனர்.

இவ்விடமாற்றப்பட்டியலை நல்லூரிலுள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பணிமனையில் பார்வையிடலாம் என வடக்கு கிழக்கு மாகாண அமைச்சுடனான இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் இணைப்பாளர் திரு. எஸ். குமாரகுருதாசன் தெரிவித்தார்.


We Serve

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தால் நடாத்தப்படும்

## அதிர்ஸ்டலாபச் சீட்டிழுப்பு

11. 12. 94

ஞாயிற்றுக்கிழமை மாலை 3. 30 மணியளவில் சித்தன்கேணியில் உள்ள லயன்ஸ் கட்டட தொழிற் பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

(10306) - தலைவர்



## பளை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

# பதவி வெற்றிடம்

### பொதுமுகாமையாளர்- 101|8

மேற்படி பதவிக்கு கீழ்க்குறிப்பிடப்படும் தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது, சகல விண்ணப்பங்களும் சொந்தக் கையெழுத்தில் சகல தரவுகளையும் உள்ளடக்கியதாக தாமாகவே தயாரித்தல் வேண்டும்.

வயது :-
25—40 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். (கூட்டுறவுச் சங்கங்களில் சேவையாற்றுபவர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது)

வேதனம் :-
1305 – 2370 / 60X4 – 75 × 11 (அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும் 30% சம்பள அதிகரிப்பும் வழங்கப்படும்)

**விண்ணப்ப முடிவு திகதி :- 1994- 12- 15**

தகைமைகள்

]அ] கூட்டுறவு ஊழியர் 9·வது சம்பளத்திட்டத்தில் முகாமை /மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக்குறைந்தது மூன்று (3) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது 10-வது சம்பளத்திட்டத்தில் முகாமை/ மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக்குறைந்தது ஆறு [6] வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

[ஆ] அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்ற பட்டத்துடன் அல்லதுஅதற்குச் சமமான தகைமையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனத்தில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக்குறைந்தது நாலு(4) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது


[இ] கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரப்) பரீட்சையில் சித்தியுடன் அல்லது க. பொ. த (உயர்தரப்) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனத்தில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆறு (6) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

சகல விண்ணப்பங்களும் கடித மேலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''பொது முகாமையாளர்பதவிக்கான விண்ணப்பம் ''எனக்குறிப்பிடப்பட்டு, தலைவர் பளை, பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பளை'' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்-

தலைவர்
பளை, பனை, தென்னை வ. அ. கூ.
சங்கம்

(10345)


## 48 ஆவது பிறந்ததின நினைவு



### அமரர் இளேற்றன் நல்லையா

(''ஒளி இல்லம்'' முன்னாள் உரிமையாளர்)

தோற்றம் 10-12-1947 — தேற்றம் 01-06-1993

இன்றுபோல் இருக்கிறது
நீர் எம்மை
தாயாக, தந்தையாக
ஏன் அதற்கும் மேலாக
ஒரு மேய்ப்பராக
இருந்து எமது


## இதோ! அறிமுகப்படுத்துகிறோம்!

ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாரா வழங்கும்

அன்டி - டன்ரி
நெய் புரியாணி (கோழி-ஆட்டிறைச்சி)
சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்
பிற்பகல் 12. 00 மணி முதல் 3. 30மணிவரை
பெற்றுக் கொள்ளலாம்.
கோழி ரூபா 67. 50 மட்டுமே
ஆட்டிறைச்சி ரூபா 47. 50 மட்டுமே

ஏமாற்றத்தை தவிர்க்க முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாரா

உங்கள் விருந்தகம்

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
[முன் ஒழுங்கை]
சுண்டுக்குளி.

எமக்கு வேறு கிளைகள் இல்லை.

புது யுகத்தில் புது உருவம்

## ஜெசித்தாரா

(சி-10867)


## நம்பிக்கையின் சேவை

# நம்பிக்கையின் சேவை

ஜெசித்தாரா 85%ற்கு மேற்பட்ட சுவை விரும்பிகளின் நம்பிக்கையை பெற்றுள்ளது. காரணம், சுத்தம், தரம், நாணயம், யாழ். மக்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்று உங்கள் மங்கள நிகழ்வுகள், பிறந்தநாட் கொண்டாட்டங்கள், திருமண வைபவங்கள், பிரியாவிடை நிகழ்வுகள் எதுவானாலும் உங்கள் இடத்திற்கே வந்து பரிமாறும் சேவை வழங்குவோம். அல்லது எங்கள் மண்டபத்தில் உங்களது நிகழ்வுகளை இனிதாக்கித் தருவோம்.

ஒருமுறை எம்மை அணுகுங்கள்

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

எமக்கு வேறு கிளைகளோ அன்றி முகவர்களோ இல்லை.

புது யுகத்தில் புது உருவம்

(சி-10866) ஜெசித்தாரா.



# சமையல் ஒரு கலை

அதனை நாங்கள் உங்களுக்கு நயமுடன் வழி சமைத்துத் தருகின்றோம். எங்களுடன் வந்து உங்கள் கீழைத்தேய, மேலைத்தேய உணவுகளை பகலிலோ அன்றி இரவிலோ பகிர்ந்து கொள்ளுங்கள்.

நிறைவான, சுகாதாரமான, சுவையான மனோரம்மிய சூழ்நிலையில் சமையலைச் சுவைக்க எங்களை சந்தியுங்கள்:

ஜோ. எகட்டனின்

உள்ளூர் விருந்தகம்

**ஜெசித்தாரா**

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
சுண்டுக்குளி.

நாங்கள் உங்கள் நாவிற்கு மேலும் சுவையூட்டுகின்றோம். எமக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை.

(சி-10868) (ஜோ. செனித்)


தலைவர்
பளை, பனை, தென்னை வ. அ. கூ.
(10345) சங்கம்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை - மானிப்பாய்

## 1995 ஆம் ஆண்டு சந்தைகளுக்கான

# கேள்வி அறிவித்தல்

மேற்படி கேள்வியின் பொருட்டு உதயன் / ஈழநாதம்பத்திரிகைகளில் 1994-11-17 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட எனது 1994-11-16 ஆம் திகதிய கேள்வி நிபந்தனைகளுக்கு அமைவாக, கீழ்க்காணும் அட்டவணையில் தெரிவிக்கப்பட்ட விபரங்களின்படி கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் இறுதித்திகதி: 1994-12-22 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணி வரையும்.
(2) கேள்விகள் கிடைக்க வேண்டிய இறுதித்திகதி: 1994-12-23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணி.
(3) கேள்விகள் திறக்கப்படும் திகதி: 1994 - 12 - 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 11 மணி.

| உப அலுவலகம் | குத்தகையின் தன்மை | கடையின் மாத வாடகை | கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பிணைப்பணம் | நிர்ணயிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|---|
| மானிப்பாய் பட்டினம்: | கட்டுடை சந்தை | 300/- | 300/- | 100/- | 500/- |
| மானிப்பாய் கிராமம்: | ஆட்டிறைச்சிக் கடை நவாலி பிரசாத் சந்தை | 250/- | 1000/- | 100/- | 11,110/- |
| | கருவாடு/ தேங்காய்க்கடை சாவற்கட்டு சந்தை | 100/- | 500/- | 100/- | 1,155/- |
| பண்டத்தரிப்பு கிராமம்: | மாட்டிறைச்சிக் கடை மாசியப் பிட்டி சந்தை | 100/- | 1000/- | 100/- | 15,400/- |
| | ஆட்டிறைச்சிக் கடை மாசியப்பிட்டி சந்தை | 100/- | 1000/- | 100/- | 10,000/- |

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
தலைமைச் செயலகம்,
மானிப்பாய். 1994 - 12 - 08

இ. கணேஸ்வரன்
செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

(சி-10877)

தாயாக, தந்தையாக
ஏன் அதற்கும் மேலாக
ஒரு மேய்ப்பராக
இருந்து எமது
ஒளி வளர் எதிர்காலத்தை
நிர்ணயித்தீர்
இன்று நீரில்லாமல்
துடுப்பு அற்ற படகாக
தத்தளிக்கும் நிலையிலும்
உமது நாற்பத்தெட்டாவது
பிறந்த தின நினைவில்
திளைக்கின்றோமையா!


''புதிய இல்லம்''
210, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (சி/10845)

நல்லையா டுஸான்
சகோதரர்கள்

# இதயத்து நினைவுகளில் ஓராண்டு நிறைவு

பிறப்பு
22-09-1935

இறப்பு
21-12-1993



## தாமோதரம்பிள்ளை சின்னராசா

(ஓய்வு பெற்ற கட்டடப்பொறியியலாளர்)

குலவிளக்கே!
பெரும் தூணாய் நின்றெங்கள்
குடும்பத்தின் சுமைதாங்கி
இடரறியாதெம்மை இவ்வுலகில்வளர்த்துவிட்டு
பிறரறியா ஒருலகில்
பிரிந்து சென்று உடல் மறைந்தீர்
நினைத்திருப்போம் உங்களை
இன்றல்ல; என்றென்றும்!

-மனைவி
பிள்ளைகள்

கோப்பாய்

(10335)

### சிந்தனைக்கு

அரசியலில் அச்சத்துடன்
ஆரம்பிப்பது பெரும்பாலும்
மடமையில் முடியும்.

- சேம்யல் கோலெரிட்ஜ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 10-12-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2339 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## பணியத் தேவையில்லை

இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காண்பதற்கான அனுமதியை சந்திரிகா அரசாங்கம் சிங்கள மக்களிடம் பெற்றுள்ளது. அதுவும், வரலாறு காணாத அளவிற்கு பெரும்பான்மையான மக்கள் இதற்கு ஆதரவளித்துள்ளனர்.

இதன் பிரகாரம் இனப்பிரச்சினைக்கு விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி உடன்பாடு ஒன்று காணப்படுவது அரசாங்கத்தின் கடமையாகின்றது. ஆகையினால் இனப்பிரச்சினை தீர்விற்கு தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு ஒன்றை அரசாங்கம் முன் வைக்கவேண்டியதும் அதன் பொறுப்பாகின்றது.

இந்த நிலையில், சமாதானத் தீர்விற்கு எதிரான சக்திகளைக் கண்டு அரசாங்கம் அஞ்சவேண்டியதோ, அன்றி, அழுத்தங்களுக்குப் பணிந்து போகவேண்டிய அவசியமோ இல்லை. அரசாங்கம் தமது வாக்களித்த மக்களுக்கு விசுவாசமாகவும், தாம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் உறுதியாக இருந்தால் மட்டும் போதுமானதாகும்.

அதைவிடுத்து, இனப்பிரச்சினைத் தீர்விற்கு முட்டுக்கட்டை போடும் சக்திகளின் அழுத்தங்களுக்கும், மிரட்டல்களுக்கும் பணிந்து போவது, அல்லது அவர்களைத் திருப்திப்படுத்த முனைவது என்பது மக்கள் அளித்த ஆணைக்கு விரோதமாகச் செயற்படுவதாகவே கொள்ள முடியும்.

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதற்கு பௌத்த பேரினவாத சக்திகள் எதிரானவைதான். ஆனால் இது புதிய விடயமல்ல. இப்பௌத்த சிங்கள பேரினவாத சக்திகளே இனப்பிரச்சினைக்கு மூலகாரணமும் ஆகும். ஆகையினால், சமாதானத் தீர்வு விடயத்தில் அவர்களைத் திருப்திப் படுத்துதல் என்பது சாத்தியமாகாதது. தமிழர் அனைவரையும் இனப்படுகொலை செய்யவேண்டும் என்பதே அவர்களின் தீர்வாகும்.

சிறிலங்கா இராணுவத்தைப் பொறுத்து விடுதலைப் புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியாக வெற்றிகொள்ள முடியாமல் இருப்பதென்பது ஜீரணிக்க முடியாத ஒன்றாகவே உள்ளது. சுமார் ஒரு தசாப்தத்திற்கு மேற்பட்ட தமது முயற்சியில் தோல்வியை ஏற்றுக் கொண்டு சமாதானத் தீர்வொன்றிற்கு அவர்கள் ஒத்துழைக்க மாட்டார்கள். தமது மேலாதிக்கத்தின் கீழேயே தீர்வு

### நூல்அறிமுகம்

கலாநிதி கா. குகபாலன் எழுதியுள்ள தீவகம்-வளமும் வாழ்வும் என்ற நூலின் அறிமுகவிழா நாளை ஞாயிறு பிற்பகல் மூன்று முப்பது மணியளவில் யாழ் இந்துக்கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சிக்கு பேராசிரியர் செ. பாலச்சந்திரன் தலைமை தாங்கவுள்ளார். யாழ். பல்கலைக்கழக பதிவாளர் பரமேஸ்வரன் வெளியீட்டுரையையும், ஆய்வுரையை பேராசிரியர் நா. பாலகிருஷ்ணனும் நிகழ்த்தவுள்ளனர்.

# திருப்பியனுப்புவதை ஆட்சேபித்து தமிழ் இளைஞர் தூக்கிட்டுதற்கொலை

## சுவிஸில் நடைபெற்ற பரிதாபகரம்

(கொழும்பு)

சுவிஸ்சர்லாந்திலிருந்து இலங்கை திருப்பிஅனுப்பப் படவிருந்த தமிழ் இளைஞர் ஒருவர் மாடியில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். இராசையா ஜெயகுமார் (27) என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவார்.

கடந்த திங்கள் தனது வசிப்பிடத்திலேயே இவர் தூங்கி தற்கொலை செய்து கொண்டார். சுமார் 600 தமிழர்களை திருப்பியனுப்ப சுவிஸ் முடிவு செய்திருந்தது இவர்களில் ஒருவரே ஜெயகுமார் ஆவார், திருப்பியனுப்பப்படுவதை ஆட்சேபித்த இவருக்கு சுவிஸ் அரசு கொடுத்த பதிலினால் இவர் கவலை கொண்டிருந்தார் எனவும், இதனாலேயே அவர் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர் குரும்பசிட்டியைச் சேர்ந்தவர் என்றும் இவரின் மரணத்தையடுத்து சுவிஸில் உள்ள தமிழ் அகதிகள் ஆர்ப்பாட்டம் நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சுவிஸில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தின் அனுசரணையுடன் வேறு சுவிஸ் அமைப்புகளுடன் இணைந்து ஜெயகுமாரின் மரணசடங்கை விரிவான முறையில் நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதே வேளை சுவிஸ் அமைப்புகள் பல அகதிகள் திருப்பி அனுப்பப்படுவதை ஆட்சேபித்துள்ளன.

# வர்த்தமானி அறிவிப்பின்படியே விமான தளம் விஸ்தரிக்கப்படுகிறது

## படை அதிகாரிகள் தெரிவிப்பு

(வவுனியா)

வவுனியா தச்சங்குளம் விமான தளத்திற்கு அருகிலுள்ள இறம்பைகுளம் மயானம், இறம்பைகுளம் மகளிர் வித்தியாலய மைதானம் என்பவை சுவீகரிப்பதுதொடர்பாக இருவருடங்களுக்கு முன்பே அரச வர்த்தமானியில் அறிவிப்பு வந்தது. அதன் பிரகாரமே இப்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இவ்வாறு விமானப் படைத் தளபதி, வவுனியா பிரிவு விமானப்படைத் தளபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஆகியோர் கூட்டாக தெரிவித்துள்ளனர்.

இருவருடங்களுக்கு முன்பாக இக்காணி சுவீகரிப்பை கைவிட படையினர் இணங்கியபோதும் இப்போது மீண்டும் காணி சுவீகரிக்கப்பட்டு வருகிறது. சுவீகரிக்கப்பட்ட காணிகளில் வேலி போடும் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புதிதாக வேலி அமைத்தாலும் மயானத்தையும், மைதானத்தையும் பொது மக்களும் மாணவர்களும் தொடர்ந்து பயன்படுத்தலாம் என மேற்படி மூன்று அதிகாரிகளும் கூறியுள்ளனர். இதற்கென பிரத்தியேக வாசல் அமைக்கப்படும் என்றும் ஆனால் அதற்குள் நிரந்தர கட்டடம் அமைக்க முடியாது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்நடவடிக்கையை இப்பகுதி மக்கள் கடுமையாக ஆட்சேபித்துள்ளதுடன் இராணுவம் சுவீகரித்த பகுதியினுள் நுழைவது நடைமுறை சாத்தியமற்றதன்று எனவும் சுட்டிக் காட்டுகின்றனர்.

# ஐ. தே. க. தேசிய பட்டியலில் ஹேமாவிற்கு இடமில்லை

(கொழும்பு)

திருமதிஹேமாபிரேமதாசாவிற்கு ஐ. தே. க தேசியப் பட்டியல் எம். பி பதவிவழங்கப்படமாட்டாது எனத் தெரியவருகிறது. கொல்லப்பட்ட ஐ. தே. க தலைவர்களின் விதவை மனைவிகள் எவரும் எம்.பிகளாக நியமிக்கப்படமாட்டார்கள் என ஐ. தே. க வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

தோல்வியடைந்த வேட்பாளர்களை தேசியப்பட்டியல் எம்.பிகளாக நியமிக்கக் கூடாதென முன்னர் தீர்மானிக்கப் பட்டிருந்தது. அதனை ரத்து செய்வது என கட்சியின் செயற்குழு முடிவெடுத்ததையடுத்து தேசியப் பட்டியலில் வெற்றிடமாக உள்ள இரண்டு இடங்களுக்கான போட்டி அதிகரித்துள்ளது.

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பில் ஐ. தே. க செயலர் காமினி விஜேசேகர, ஜி. எம் பிரேமசந்திர ஆகியோர் கொல்லப்பட்டனர். தேசியப் பட்டியல் உறுப்பினர்களான இவ்விருவரின் இடத்தையும் நிரப்ப ஐ. தே. க தலைமை இப்போது நடவடிக்கை எடுத்துவருகிறது.

# ஆசிரியசம்பளதிட்டம் அமுலாகாவிடின் தொழிற்சங்க போராட்டம் நடக்கும்

## இலங்கை தமிழர்ஆசிரியர் சங்க பொதுச்செயலர்எச்சரிப்பு

(கொழும்பு)

இலங்கை ஆசிரிய சேவையையும் புதிய சம்பளத் திட்டத்தையும் ஆசிரிய சங்கங்களின் சம்மேளனத்திற்கு உறுதி அளித்தபடி புதிய அரசு ஜனவரியில் நடைமுறைப்படுத்தத் தவறினால் நாடு தழுவிய ரீதியில் தொழிற்சங்கப் போராட்டத்தை தாம் நடத்தப் போவதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் த.மகாசிவம் அரசை எச்சரித்துள்ளார்.

கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடாத்திய ஆசிரியர்களின் கடமைகள், பொறுப்புகள், உரிமைகள், சலுகைகள் என்ற விடயம் தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் ஆசிரிய சேவை தொடர்பான முழுமையான சட்டத்தை அரசு இன்னும் வர்த்தமானியில் விளம்பரப் படுத்தவில்லை இது ஆசிரியர்களுக்கும் ஆசிரிய சங்கங்களுக்கும் அதிருப்தியைத் தந்துள்ளது ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைப் படுத்துமாறு இன்றுவரை சுற்று நிருபங்கள் தயாரித்து அனுப்பப் படவுமில்லை எனினும் இலங்கை ஆசிரிய சேவையையும், புதிய சம்பளத் திட்டத்தையும் ஆசிரிய சங்கங்களின் சம்மேளனத்திற்கு உறுதியளித்தபடி அரசு நிறைவேற்றும் என நம்புகிறோம்.

அவ்வாறு அரசு ஜனவரி 95 இல் நடைமுறைப் படுத்தத் தவறினால் நாடு தழுவிய ரீதியில் இலங்கையிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆசிரியர்கள் தொழிற் சங்க போராட்டத்தில் ஈடுபடுவது தவிர்க்க முடியாததாகி விடும் என்றார்.

# ஐ.தே. க. தேசியமாநாடு 17 ஆம் திகதி நடைபெறும்

## பரபரப்பான சூழ்நிலை நிலவுகிறது

(கொழும்பு)

எதிர்வரும் 17 ஆம் திகதி ஐ. தே. கட்சியின் தேசிய மகாநாடு நடைபெறவுள்ளது.

இது மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் நடைபெறவுள்ளது என அக்கட்சியின் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கொறள தெரிவித்துள்ளார்.

சென்ற காலங்களில் பாதிக்கப்பட்ட ஐ. தே. கட்சி உறுப்பினர்கள் இம்முறை சர்ச்சையை கிளப்ப உள்ளதாக தெரியவந்துள்ளது.

சுகததாச விளையாட்டு அரங்கில் நடைபெற உள்ள இந்த மாநாடு தொடர்பாக கட்சியின் உறுப்பினர்கள் பற்றி தகவல் பெறப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அரசின் பொருளாதார கொள்கையில்

# மன்னார்தீவு மக்களின்

சமாதானத் தீர்வொன்றிற்கு அவர்கள் ஒத்துழைக்க மாட்டார்கள். தமது மேலாதிக்கத்தின் கீழேயே தீர்வு ஏற்பட வேண்டும் என்பது அவர்களின் சிந்தனையாகும்.

உள்நாட்டிலுள்ள இவ் இரண்டு பிரதான சக்திகளுக்கு அப்பால், இந்தியாவின் நிலைப்பாடு / அழுத்தம் என்பனவும் விடுதலைப்புலிகளுடன் சமாதான ரீதியான பேச்சுவார்த்தை நடத்துவதற்கும், உயர்வான சுயாட்சித் திட்டம் ஒன்று இலங்கையில் ஏற்படுவதற்கும் எதிரானதாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் ஆரம்பகாலம் தொட்டே அதற்கு இருந்து வரும் பகைமையும், உயர்வான சுயாட்சி முறை இந்தியாவின் தேசிய இனங்களின் எழுச்சிக்கு வழி வகுக்கும் என்ற அச்சமும் இதற்குக் காரணமாகலாம்.

இவ்வாறான சக்திகள் - ஓரளவுபலமானவையும் கூட- இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியான தீர்விற்கு முட்டுக் கட்டையாக உள்ளன என்பது உண்மை தான். ஆனால், இவையாவும் எதிர்பார்க்கப்பட்டவைதான் பல ஆண்டுகளாக இவ் அரசியற் சூழ்நிலை இல்லாமலும் இல்லை. இது ஜனாதிபதி சந்திரிகாவிற்கு வாக்களித்த மக்களுக்கும் தெரியாததல்ல. ஜனாதிபதிக்கும் புரியாததல்ல.

இந்நிலையிலும் மக்கள் இனப்பிரச்சினை சமாதான ரீதியில் தீர்க்கப்பட வேண்டும் என வாக்களித்துள்ளனர். இதன் பிரகாரம், இவ் எதிர்ப்பான சக்திகள் யாவற்றையும் மீறி இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காணப்பட வேண்டும் என்பதே மக்களின் விருப்பாகவுள்ளது. அதைவிடுத்து, இவ் அணிகளுடன் சமரசம் செய்யவோ அவர்களுக்கு விட்டுக் கொடுத்து அவர்களின் சிந்தனையின் படி செயற்படவோ அல்ல. அவ்வாறு அவர்கள் சிந்தனையில் செயற்படுவதானால் மக்கள் அவர்களுக்கே வாக்களித்திருக்க முடியும். இடையில் ஒரு பூசாரியை உருவாக்க வேண்டிய தேவையில்லை.

அவ்வாறு இல்லாது சமாதானத் தீர்விற்கு விரோதமான சக்திகளுடன் சந்திரிகா அரசாங்கம் சமரசம் செய்து கொள்ள முற்படுமானால், இனப்பிரச்சினை விடயத்தில், மக்கள் அளித்த தீர்ப்பிற்கு அது விரோதமாகச் செயற்படுகின்றது என்றே கொள்ளலாம், அதுமட்டுமல்ல, மக்களின் ஆணையை மீறிய இச்செயல் அழுத்தத்தினால் ஏற்பட்டது என்று கொள்வதைவிட அரசாங்கத்தின் சிந்தனையே சமாதான தீர்விற்கு விரோதமானது என்றே கொள்ள வேண்டும். ஏனெனில் ஒரு 'ஜனநாயக நாட்டில்' மக்களை விடப் பெரிய சக்தி எதுவுமில்லை. அச்சக்தியைவிட வேறு ஒரு சக்திக்கு 'ஜனநாயக அரசு' ஒன்று பணிய வேண்டிய அவசியமுமில்லை. ஆகையினால், சந்திரிகா அரசு விட்டுக்கொடுப்பதானால் அது ஆட்சியாளரின் விருப்பத்தின் பேரிலான மாற்றமாக இருக்குமே ஒழிய அழுத்தத்தினால் ஏற்பட்ட மாற்றமாக இராது.

# அரசின் பொருளாதார கொள்கையில் வர்த்தகர்கள் சந்தேகம்

## விலை உயர்வுக்கு காரணம் என்கிறார் அமைச்சர்

(கொழும்பு)

தனியார் துறையினர் மத்தியில் நிச்சயமின்மை இருந்தமையே சமீபத்திய விலை உயர்வுகளுக்கு முக்கிய காரணம் ஆகும். இவ்வாறு வர்த்தக வாணிபத் துறை அமைச்சர் கிங்ஸ்லி, டி. விக்கிரமரத்தனா கூறியுள்ளார். கோட்டே சிறி ஜெயவர்த்தனபுர பாராளுமன்றக் கட்டடத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், அரசாங்கம் சந்தைப் பொருளாதாரக் கொள்கையை பின்பற்றுமா? அல்லது கட்டுப்பாடானபொருளாதார கொள்கையை பின்பற்றுமா? என்பதுபற்றிவர்த்தகர்கள்மத்தியில் சந்தேகம் நிலவியது. இந்தச் சந்தேகத்தை ஆர்வமுள்ள சில குழுக்கள் மேலும் பெரிது படுத்தின. உருளைக் கிழங்கு, செத்தல் மிளகாய், வெங்காயம் போன்ற பொருட்களை இறக்குமதி செய்வதால் இவற்றின் விலைகளை குறைக்க முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

# மண்ணெண்ணெய் உடன் வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தற்சமயம் யாழ்.குடாநாட்டில் மண்ணெண்ணெயின் விலைஏற்றப்பட்டுவருகின்றது திடீர் விலையேற்றத்தைக்கட்டுப்படுத்துவதற்கு இறக்கப்பட்டமண்ணெண்ணெய் உடன் பலநோக்குகூ.சங்கங்கள்மூலம் பாவனையாளர்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மேலும் கடற் கொந்தளிப்பின் மத்தியிலும் இறங்குதுறை ஊழியர்கள் இழுவைப் படகுகளைப் பயன் படுத்தாமல் மண்ணெண்ணெய் பரல்களை கடலில் இறக்கி கரைக்கு இழுத்துவர சம்மதம் தெரிவித்துள்ளதாக யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

இதனை அடுத்து இரண்டொரு தினங்களில் மண்ணெண்ணெய் இறக்கப்பட்டு முடிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

(பா), (தி), (யோ)

## தொண்டர் விழா

(தென்மராட்சி)

இலங்கைச் செஞ்சிலுவை சங்கத்தின் சாவகச்சேரி பிரிவு தொண்டர் விழாவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் அண்மையில் சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் சாவகச்சேரி பிரிவுத் தலைவரும் யாழ் மாவட்ட செஞ்சிலுவை சங்கத் தலைவரும் ஆகிய டாக்டர்- த. சிங்கராசா தலைமையில் இடம்பெற்றது.

(86)

# மன்னார்தீவு மக்களின் பிரச்சினைகளை தீர்க்குக

மன்னார்தீவு மக்களின்உணவுப் பொருள்களின் தட்டுப்பாடு, போக்குவரத்துப் பிரச்சினை, இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள் போன்றவற்றை நீக்குமாறு மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி வண. இராயப்பு யோசப் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம்கோரிக்கை விடுத்துள்ளார்.

அடுத்த மாதம் கொழும்பிற்கு வருகைதர இருக்கும் பாப்பரசருக்கான ஏற்பாடுகளை கவனிக்க கொழும்பு சென்ற ஆயர் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளார்.

மன்னார் தீவு மக்கள் அத்தியாவசிய பொருள்களிற்கு பெரும் நெருக்கடியை எதிர் நோக்கி வருகின்றனர். இந் நிலையைப் போக்க உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்துடன் மன்னார் மக்களிற்கு ஒரு தரைப் பாதை திறந்துவிடப்பட வேண்டும். இதன்மூலம் அவர்களது போக்குவரத்துப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும். இடம்பெயர்ந்த மக்கள் படும் சொல்லொணா துன்பங்கள் தீர்க்கப்படவேண்டும் என ஆயர் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

அடுத்தமாதம் பாப்பரசரின் வருகைக்காக கொழும்பு செல்ல உள்ள ஆயர் ராயப்பு யோசப் அவர்கள் மன்னார் தீவு மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக தாம் ஜனாதிபதிக்கு விடுத்துள்ள கோரிக்கைகளை மீண்டும் நேரில் சந்தித்து வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ), (பா), (தி)

# சீனியின் விலையில் உயர்வேதுமில்லை

- அமைச்சர் விக்கிரமரத்னா

(கொழும்பு)

சீனியின் விலை இரண்டு ரூபாவினால் அதிகரிக்கப்படும் என வெளிவந்த செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை. சில பத்திரிகைகள் இது பற்றி செய்தியும் வெளியிட்டிருந்தன. எனினும் இத்தகைய திட்டம் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்திற்கு கிடையாது இவ்வாறு வர்த்தக வாணிபத் துறை அமைச்சர் கிங்ஸ்லி டி. விக்கிரமரத்னா கூறியுள்ளார்.

பாராளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் குறிப்பிடுகையில் பாவனையாளர்களின் நலன் கருதி நீண்ட காலத்திட்டத்திற்கு அமைவாக 5000 சில்லறை விற்பனை நிலையங்கள் கூட்டுறவு மொத்த வியாபார நிறுவனத்தால் திறக்கப்படும். அதன் விநியோக நடவடிக்கைகளும் தனியார் மயமாக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## மாணவர் உணவு முத்திரை

# கிராம சேவகரிடம் தொடர்பு கொள்க

(யாழ்ப்பாணம்)

வறுமை நிவாரண உணவு முத்திரை பெறாத பாடசாலைக்கு செல்லும் 5-18 வயதுக்குட்பட்ட பிள்ளைகளையுடைய பெற்றோர்கள் தத்தம் பிரிவிலுள்ள கிராம அலுவலர்களுடன் எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இக் கோரிக்கையைநல்லூர் பிரதேச செயலர் விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில், எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்பாக விண்ணப்ப் படிவங்கள் சமர்ப்பிக்கப் படவேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

சென்ற காலங்களில் பாதிக்... தெரிவித்துள்ளார்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994.12.10**

**சனி இரவு**

08. 01 - சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி

08. 10 - நிகழ்வும்பகிர்வும்

08. 25 - நேயர் கடிதங்கள்

08. 30 - செய்திகள்

08. 40 - லெப்ரினன்ட் கேணல் மதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி

09. 00 மணிக்கு இரவு நிகழ்ச்சிகள்யாவும் நிறைவு பெறும்

**1994-12- 11**

**ஞாயிறு காலை**

07. 02 - மாவீரவணக்கம்

07. 15 - களத்தில் மலர்ந்தவை

07. 30 - செய்திகள்

07. 35 - பத்திரிகைச் செய்திகள்

07. 40 - களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

08 00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள்யாவும் நிறைவு பெறும்.

# தற்கொலைத் தாக்குதல் மூலம் மாலை. ஜனாதிபதியை கொல்ல சதி

## தமிழகப் பெண் தாக்க இருந்தாராம்

(சென்னை)

மாலைதீவு ஜனாதிபதி முகம்மது அப்துல் கையூமை மனிதக் குண்டு ஒன்றின் மூலம் கொலை செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததாக இந்திய பொலிசார் கூறியுள்ளனர்.

இந்தியாவின் விண்வெளி இரகசியங்கள் கடத்தப்பட்டமை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள மாலைதீவுப் பெண்ணான றசீக்காவின் நாட் குறிப்பு மூலம் இது தெரியவந்திருப்பதாகவும் அவர்கள் மேலும் கூறியுள்ளனர்.

நவம்பர் 14-ம் திகதியன்று மாலைதீவின் சுதந்திரதினம் கொண்டாடப்படும்போது தமிழகத்தைச் சேர்ந்த சீதா எனும் பெண் தன் இடுப்பில் குண்டுகளைப் பொருத்திய படி ஜனாதிபதி கையூமின் காரின் முன்பாகப் பாய்ந்து தற்கொலை செய்துகொள்ளவும், ஜனாதிபதி கையூமை கொலை செய்யவும் திட்டமிடப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

# யாழ். பிரதேச செயலகத்திற்கு செயலகத்தில் இடம் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தின் பிரதான கட்டடப்பகுதி ஒன்றை யாழ். பிரதேச செயலகத்தின் காரியாலயப் பணிக்கு வழங்குமாறு வடக்கு-கிழக்கு மாகாண சபை செயலகத்தைக் கேட்டுள்ளது.

முறையான பிரதேச செயலகமாக ஜனவரியிலிருந்து பிரதேசசெயலகங்கள் செயற்பட உள்ளதால், யாழ். பிரதேச செயலக கட்டடம் பற்றாக் குறையாக இருப்பதனால் யாழ். செயலகத்தின் பிரதான பகுதி ஒன்றை ஒதுக்கி வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திரு. கணேசநாதன் செயலகத்திற்கு தகவல் அனுப்பியுள்ளார்.

யாழ். புதிய அரச அதிபர் இன்று பத்தாம் திகதி யாழ். வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இவர் அரச அதிபர் பொறுப்பை ஏற்றுக்கொண்டதை அடுத்து இதுபற்றி புதிய அரச அதிபருக்கு தெரிவிக்கப்படவுள்ளது. (தி) (பா)

# உதவிப்பண கொடுப்பனவு

[யாழ்ப்பாணம்]

வேலணை, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான நவம்பர் மாதக் கொடுப்பனவு நேற்று [வெள்ளி] தொடக்கம் யாழ். பிரதம தபாலகத்தில் இயங்கும் மேற்படி பிரிவுகளின் தபாலகங்களில் வழங்கப்பட்டு வருகின்றது.

இத்துடன் தொழுநோய். புற்றுநோய், காசநோய் என்பவற்றால் பாதிக்கப்பட்டோருக்கான உதவு தொகையும் வழங்கப்படுகின்றது. (22)

# இளைஞர் தற்கொலை


[யாழ்ப்பாணம்]

குடும்பத்தகராறு காரணமாக மனமுடைந்து நச்சுத் திராவகம் அருந்தியதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக மரணமடைந்தார்.

அச்செழு கொலனியைச் சேர்ந்த செல்லத்துரை சிறீதரன் [வயது 26] என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார். [சி]

# ஆனையிறவில் வீரச்சாவடைந்தோர்


மேஜர் பிரசன்னா


கப்டன் வாஞ்சிநாதன்


கப்டன் ஐக்கியலிங்கம்

# தொழில்நுட்பக் கல்லூரிகளில் 17 கற்கை நெறிகளுக்கு மாணவர் அனுமதி

(நவாலி)

யாழ் தொழில் நுட்பக்கல்லூரியில் 1994,95 கல்வியாண்டில் பதினேழு கற்கைத்துறைகளில் மாணவர்களை அனுமதிப்பதற்கு கல்வியமைச்சு அனுமதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் யாழ் தொழில் நுட்பக்கல்லூரிக்கு அனுமதிக்கப்படாத சில கற்கை நெறிகள் இவ்வருடத்திற்கு அனுமதிக்கப்படுவதனால் பெருமளவிலான மாணவர்கள் பயன் பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட தொழில் நுட்பக்கல்லூரிகளுக்கு அனுப்பி வைக்குமாறு கல்வியமைச்சு கேட்டுள்ளது. [05]

# உணவுதட்டுப்பாட்டை நிவர்த்திசெய்ய 'குமண'வை தொடர்சேவைக்கு விடுக

## யாழ். புனர்வாழ்வுப்பகுதி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் தற்சமயம் ஏற்பட்டுள்ள உணவுப் பொருள்களின் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு 'குமண' கப்பலினை யாழ் செயலகத்திற்கு தொடர்ந்து உணவுப்பொருட்களை ஏற்றியிறக்க அனுமதிக்கும்படி யாழ் செயலக புனர்வாழ்வுப்பகுதி புனர்வாழ்வு அமைச்சைக் கேட்டுக் கொண்டுள்ளது.

நேற்று யாழ் செயலக புனர்வாழ்வுத் திட்டப் பணிப்பாளரினால் புனர்வாழ்வு அமைச்சிற்கு மேற்படி கோரிக்கை அடங்கிய செய்தி ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அச் செய்தியில் யாழ் குடாநாட்டில் தற்சமயம் ஏற்பட்டுள்ள உணவுப்பொருள்களின் தட்டுப்பாட்டை போக்கு முகமாக யாழ் அரச அதிபரினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட 'குமண' கப்பலினை தொடர்ந்து யாழ் செயலகத்திற்கான பொருள்களை ஏற்றியிறக்குவதற்கு அனுமதிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இக் கப்பல் தற்சமயம் ஒரு தொகுதி மாவை திருகோணமலையில் இருந்து ஏற்றி வந்துள்ளது என தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பலினை தொடர்ந்து யாழ் செயலகத்திற்கான பொருள்களை ஏற்றியிறக்க புனர்வாழ்வு அமைச்சு அனுமதிக்கும் பட்சத்தில் யாழ் மாவட்டத்தில் உள்ள அரசாங்க திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் துறையினர், வர்த்தகர்கள் கொழும்பில் இருந்து பொருள்களை ஏற்றி வர அனுமதிக்க முடியும் என யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் தெரிவித்தனர்.

மேலும் போதிய அளவான கப்பல் வசதி ஏற்படும் பட்சத்தில் காலத்திற்கு ஏற்றவாறு தட்டுப்பாடான பொருள்களை இனம் கண்டு அவ்வாறான பொருள்களை கொழும்பிலிருந்து சகல துறையினரும் கொள்வனவு செய்வதற்கான புதிய நடைமுறை ஒன்றும் வகுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (பா. தி)


2-வது வாரத்தை நோக்கி

யாழ். ஸ்ரீதர் அகலத்திரையில்

தினசரி பிற்பகல்:- 2.30, 4.30, 6.30

சனி, ஞாயிறு காலை 10.30.

பிற்பகல்:- 2.30, 4.30, 6.30

விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக்கழகமும் நிதர்சனமும் இணைந்து

திரைப்படப் பிரிவின் தயாரிப்பில் உருவாகிய

ந. கேசவராஜனின்

“[illegible]”


# ஆந்திர - கர்நாடக சட்டசபை தேர்தல் அதிகாலையில் கட்சிகளின் நிலைவரம்

(புதுடில்லி)

ஆந்திர, கர்நாடக கோவா, சிக்கிம் ஆகிய மாநிலங்களில் நடைபெற்ற சட்டசபைத் தேர்தல்களின் முடிவுகள் வெளியாகி வருகின்றன. கோவா சிக்கிம் ஆகிய மாநிலங்களுக்கான உத்தியோகபூர்வ முடிவுகளும்- ஆந்திர கர்நாடக மாநிலங்களில் கடைசியாக கிடைத்த செய்திகளின்படி கட்சிகளின் முன்னணி விபரமும் வருமாறு:

ஆந்திர பிரதேசம்

| | | |
|---|---|---|
| தெலுங்கு தேசம் | - | 159 |
| மார்க்சிஸ்ட் | - | 12 |
| இ. காங்கிரஸ் | - | 19 |
| இந்திய கம்யூனிஸ்ட் | - | 16 |
| ஏனையவை | - | 11 |

கர்நாடகம்

| | | |
|---|---|---|
| ஜனதாதள் | - | 79 |
| இ. காங்கிரஸ் | - | 23 |
| பாரதிய ஜனதா | - | 12 |
| கர்நாடக காங்கிரஸ் | - | 04 |
| அ. தி. மு. க. | - | 01 |
| ஏனையவை | - | 11 |

சிக்கிம்

| | | |
|---|---|---|
| சிக்கிம் ஜனநாயக முன்னணி | - | 13 |
| சிக்கிம் சங்ராம் பரிஷத் | - | 03 |
| இ. காங்கிரஸ் | - | 01 |

கோவா

| | | |
|---|---|---|
| இ. காங்கிரஸ் | - | 09 |
| மகாராஷ்டிரவாதி கோவந்த கட்சி | - | 07 |
| ஐக்கிய கோவா ஜனநாயக கட்சி | - | 02 |
| பாரதிய ஜனதா | - | 01 |

# குழந்தை மரணம்

நோயின்காரணமாக பெண் குழந்தையொன்று உயிரிழந்தது.

சுண்டிக்குளிப் பகுதியில் தங்கியிருந்த புங்குடுதீவு 7-ம் வட்டாரத்தைச் சேர்ந்த திரிபுவனன் சுகதாயினி என்ற ஆறுமாதக் குழந்தையே உயிரிழந்ததாகும்.

முட்டு, காய்ச்சல் என்பனவற்றால் பீடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இரு தினங்கள் தனியார் மருத்துவமனை ஒன்றிலும் மூன்று தினங்கள் யாழ் போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டிருந்த இக் குழந்தை சென்ற வியாழன் உயிரிழந்ததாக குடும்பத்தினர் தரப்பில் கூறப்பட்டது. (22)

# மட்டு. மாவட்டத்தில் தொடர்ந்தும் கடும் மழை

## 24 மணி நேரத்தில் 184 மி. மீ. பதிவு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெரும் மழைபெய்துவருவதாக கூறப்படுகிறது. நேற்றுக் காலையில் முடிவடைந்த இருபத்தி நான்கு மணி நேரத்தில் மட்டும் 184 மி. மீ. மழை பெய்திருப்பதாக வானிலை அவதான நிலையம் கூறியுள்ளது.

இதனால் நெற்செய்கைக் காணிகள், வயல்கள் என்பன பெருமளவில் நீரில் மூழ்கி இருப்பதுடன், குளங்கள், வாவிகள் போன்றனவும் நிரம்பியிருப்பதாக கூறப்படுகிறது. வாழைச்சேனைமுதல் களுவாஞ்சிக்குடி வரையிலான பிரதான வீதிகள் அனைத்தும் நீரில் மூழ்கிப் போயுள்ளன. தொலைத்தொடர்பு சேவைகளும் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

# சீனாவில் நடந்த தீ விபத்தில் 500 பேர் பலி

[பீகிங்]

அம்பாறை

கொழும்பில்

# "பிஞ்சு மனம்"

(வர்ண முழு நீளப்படம்)

திரைப்பட பிரியர்களுக்கு மற்றுமோர்
அரிய திரைவிருந்து "பிஞ்சு மனம்"

தமிழீழ திரைவானில்
உலாவி வருகின்றது "பிஞ்சு மனம்"

தமிழீழ மக்கள்
பார்த்து மகிழ "பிஞ்சு மனம்"

(சி-10888)


## யாழ் வன்னி தொடர்பு சேவை

யாழ்ப்பாணத்திற்கும் வன்னிப்பகுதிக்கும் செய்திகள் (தந்தி) பரிமாற்றம் செய்வதற்கு யாழ். ஆரியகுளம் சந்திக்கு அண்மையிலும், கிளிநொச்சி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அருகாமையிலும் உள்ள கருமபீடங்களிலும், ஓமந்தை சோதனை நிலையத்திலுள்ள கருமபீடத்திலும் செய்திகள் ஏற்கப்படுகின்றன.

1. சலுகை செய்திகள் முதல்15சொற்களுக்கும் ரூபா 15/-ம் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 2/-ம் அறவிடப்படும்

2. வழமைச் செய்திகள் முதல் 10 சொற்களுக்கு ரூபா 100/-ம் மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 5/-ம் அறவிடப்படும்

3. வியாபாரச் செய்திகள் முதல் 10 சொற்களுக்கு ரூபா 200/-ம் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 15/-ம் அறவிடப்படும்

(மேற்கூறப்பட்ட 1,2ற்குரிய பதில் பெறுவதற்கு ரூபா 100/-ம் 3ற்கு ரூபா 200/-ம் அறவிடப்படும்)

அவசர கட்டணம் அறவிடப்படும் மேற்குறிப்பிட்ட செய்திகள் உடன் விநியோகிக்கப்படும்.

மேலதிக விபரங்களை அந்த அந்த கருமபீடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

(சி-10872)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


மலையில் இருந்து ஏற்றி வந்துள்ளது என தெரிவிக்கப்பட்

தாக தெரிவிக்கப்பட்டது.

(பா, தி)

### காணாமற்போன மீனவர்பற்றி

# தகவல் அறிவதற்கு செஞ்சிலுவையிடம் முறையீடு

(குருநகர்)

கடந்த 3ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை கல்முனைக் கடற்பரப்பில் வைத்து சிறிலங்கா கடற்படையும், காஞ்சகாட்டுப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவமும் நடத்திய தாக்குதலை அடுத்து காணாமல்போயுள்ள மீனவர்கள் இருவர் பற்றிய தகவல்கள் எதுவும் இதுவரை பெறமுடியாமல் இருப்பதைத் தொடர்ந்து அம் மீனவர்களின் மனைவிமார் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதியிடம் ராணுவம் அவர்களை கைது செய்து கொண்டு சென்றுள்ளனராஎன்பதை அறிந்துதெரிவிக்கும்படி விண்ணப்பித்துள்ளனர்.

அன்றையதினம் பாசையூர் காட்டுவளவைச்சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தகப்பனான நீக்கிலாப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை (ஞானம் வயது 36), குருநகர் திலீபன் சிற்றூரைச்சேர்ந்த இளம் குடும்பஸ்தரான பத்மநாதன் உதயகுமார் (வயது 22) ஆகியோர் காணாமல் போயுள்ளமை தெரிந்ததே. (21)

## பிரதேச

சமூக சேவைப் பகுதி, காணி சம்பந்தமானவை, விவசாயம்-கைத்தொழில் என அரச அதிபரின் கீழுள்ள அதிகாரங்கள் பிரதேச செயலர்களிடம் கையளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சி திணைக்களத்தின் வேலைகளை பிரதேச செயலகங்கள் கவனிக்கும். இவை சம்பந்தமான தகவல்கள் கொழும்பிலிருந்து பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவின் கீழ் உள்ள கிராம சேவையாளர்கள் பிரிவின் தொகைக்கு ஏற்ப பிரதேச செயலகங்களின் ஆளணி அமையும் எனவும் கூறப்பட்டது.

ஜனவரி மாதத்திலிருந்து நாட்டில் உள்ள 268 பிரதேச செயலகங்களும் இத்தரத்தை பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் தற்போது பிரதேச செயலர்களாக பணிபுரிபவர்களே புதிய தரத்திலான பிரதேச செயலர்களாக தொடர்ந்து பணிபுரிவர்.

இப்பிரதேச செயலகங்களில் ஒவ்வொன்றிலும் உதவி பிரதேச செயலர்களும் நியமிக்கப்பட உள்ளனர். தற்போது பணியாற்றும் சிரேஷ்ட அதிகாரிகளிடமிருந்து இந்த நியமனம் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (தி), (பா)

## விமான நோட்டம்

வடமராட்சி கிழக்கில் குடியிருப்பு பகுதிகள் மீது குண்டு வீச்சு விமானங்கள் அடிக்கடி நோட்டமிட்டு வருகின்றன. அப்பகுதிக் கடற்பிராந்தியத்தில் கடற்படை படகுகள் ரோந்தும் காணப்படுகிறது,

## சமாதானத்திற்கு

தீர்வுக்கான சமாதான முயற்சிகளை மேற்கொள்ள அரசாங்கம்தீர்மானித்துள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## அம்பாறை

வந்த விசேட அதிரடிப் படையினர் மீதும் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தி அவர்களை தடுத்து நிறுத்தினர். இத்தாக்குதலில் பவள் கவச வாகனமும் மற்றைய வாகனமும்சேதமாக்கப்பட்டது.

இதேவேளை அம்பாறையில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்ட விசேட அதிரடிப் படையினர் கெரில்லாக்களை அடக்குவதற்கான விசேட பயிற்சிகளைப் பெற்றவர்கள் என பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் சிங்கள சேவை தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்ட படையினரில் இருவர் அதிகாரிகள் தரத்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆந்திர

ஜனதாதள் தலைவரான தேவகவுடாவும் முன்னணியிலுள்ளனர்.

ஆந்திர, கர்நாடக மாநில சட்டசபைத் தேர்தல்களின் முடிவுகள் பிரதமர் நரசிம்மராவுக்கு பெரும் நெருக்கடியை உருவாக்குமெனவும், அவரது பிரதமர் பதவிக்கும் கட்சித் தலைவர் பதவிக்கும் தேர்தல் முடிவுகள் சவாலாக அமையுமெனவும் அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பிரதமர் நரசிம்மராவ் பிறந்த இடமான நந்தியாவிலும் இந்திராகாங்கிரஸ் பின்னடைவைச் சந்தித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிக்கிம், மாநிலத்திலும் காங்கிரஸ் கட்சிக்கு பின்னடைவு ஏற்பட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கோவா மாநிலத்தில் வெளியான 19 முடிவுகளில் 9 இடங்களில் காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ளது.

## கொழும்பில்

சமாதான பாதயாத்திரை முடிவில் அரசாங்கத்துக்கும்-விடுதலைப்புலிகளுக்கும் மனுக்களை அனுப்பிவைத்ததாகவும் செய்திகள் தெரிவிக்கப்பட்டன.

புலிகளுக்கான மனு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதுபோன்ற சமாதான யாத்திரை பெப்ரவரி 15இல் வவுனியாவில் நடத்தப்பட இருப்பதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

[பீகிங்]

சீனாவில் வடமேல் மாகாணமொன்றில் திரைப்பட மாளிகை ஒன்று தீப்பற்றிக் கொண்டதனால் 500 க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

இவர்களில் அநேகர் பாடசாலைப் பிள்ளைகளாவர். சிறுவர்களும் ஆசிரியர்களுமாக விசேட படக்காட்சியை பார்த்துக்கொண்டிருந்த போது தீ விபத்து ஏற்பட்டதாகவும் இவர்களில் 500 பேரே இவ்வாறு இறந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# மரண அறிவித்தல்

## திருமதி
## தாமோதரம்பிள்ளை நாகம்மா

புங்குடுதீவு 4-ம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது 15/1 வைமன் வீதியில் வசித்தவருமான திருமதி தாமோதரம்பிள்ளை நாகம்மா காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை ஆசிரியரின் அன்பு மனைவியும், கிருஷ்ணவேணி (ஜேர்மனி), சிவரெத்தினம் (கொழும்பு), புஸ்பவதி (கோப்பாய் ஆசிரிய கலாசாலை), குணரஞ்சினி (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), ஞானகலா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயாரும், தனபாலசிங்கம்(ஜேர்மனி), இராணி (கொழும்பு), வரதராஜா (யாழ் புனர்வாழ்வு திணைக்களம்), இலங்கைநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று பிற்பகல் 3 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காககோம்பையன்மணல்மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

தா. சிவரெத்தினம் (மகன்)

பொ. வரதராஜா (மருகன்)

15/1, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

(10355)